# சைவ நெறி

## தரம்

## 6

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்



சகல பாட நூல்களையும் இலத்திரனியல் ஊடாகப் பெற்றுக் கொள்வதற்கு **www.edupub.gov.lk** வலைத்தளத்தை நாடுங்கள்.

| | |
|---|---|
| முதலாம் பதிப்பு | 2014 |
| இரண்டாம் பதிப்பு | 2015 |
| மூன்றாம் பதிப்பு | 2016 |
| நான்காம் பதிப்பு | 2017 |
| ஐந்தாம் பதிப்பு | 2018 |
| ஆறாம் பதிப்பு | 2019 |

எல்லா உரிமையும் இலங்கை அரசினர்க்கே.

**ISBN 978-955-25-0067-1**

**கல்வி அமைச்சின் இந்து சமய ஆலோசனைச் சபையின் ஆலோசனைகள் பெறப்பட்டு வெளியிடப்படுகின்றது.**

இந்நூல் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்
இல 49. ஜயந்த வீரசேகர மாவத்த, கொழும்பு - 10
இல் அமைந்துள்ள எஸ் அண்ட் எஸ் பிரின்டஸ்
அச்சகத்தில் அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டது.

# தேசிய கீதம்

ஸ்ரீ லங்கா தாயே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழுமில்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல - அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ

ஆனந்த சமரக்கோன்
கவிதையின் பெயர்ப்பு



''புதிதாகி, மாற்றமடைந்து சரியான அறிவின் மூலம்
நாட்டுக்குப் போன்றே முழு உலகிற்கும் அறிவுச் சுடராகுங்கள்''

## கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி


கடந்து சென்ற இரு தசாப்தங்களுக்கு அண்மிய காலமானது உலக வரலாற்றில் விசேட தொழினுட்ப மாற்றங்கள் நிகழ்ந்ததொரு காலமாகும். தகவல் தொழினுட்பம் மற்றும் ஊடகங்களை முன்னணியாகக் கொண்ட பல்வேறு துறைகளில் ஏற்பட்ட துரித வளர்ச்சியுடன் இணைந்து மாணவர் மத்தியில் பல்வேறு சவால்கள் தோன்றியுள்ளன. இன்று சமூகத்தில் காணப்படும் தொழில்வாய்ப்பின் இயல்பானது மிக விரைவில் சிறப்பான மாற்றங்களுக்கு உட்படலாம். இத்தகைய சூழலில் புதிய தொழினுட்ப அறிவையும் திறனையும் அடிப்படையாகக் கொண்டதொரு சமூகத்தில் வெவ்வேறு விதமான இலட்சக் கணக்கான தொழில்வாய்ப்புகள் உருவாகின்றன. எதிர்கால சவால்களை வெற்றிகொள்ளும் பொருட்டு நீங்கள் பலம்பெற வேண்டுமென்பது கல்வி அமைச்சரென்ற வகையில் எனதும் எமது அரசினதும் பிரதான நோக்கமாகும்.

இலவசக் கல்வியின் சிறப்புமிக்கதொரு பிரதிபலனாக உங்களுக்கு இலவசமாகக் கிடைத்துள்ள இந்நூலை சீராகப் பயன்படுத்துவதும் அதன்மூலம் தேவையான அறிவைப் பெற்றுக்கொள்வதுமே உங்கள் ஒரே குறிக்கோளாக இருக்க வேண்டும். அத்துடன் உங்கள் பெற்றோர்களுட்பட மூத்தோரின் சிரமத்தினதும் தியாகத்தினதும் பிரதிபலனாகவே இலவசப் பாடநூல்களை அரசினால் உங்களுக்குப் பெற்றுத்தர முடிகிறது என்பதையும் நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஓர் அரசாக நாம், மிக வேகமாக மாறி வரும் உலக மாற்றத்திற்குப் பொருந்தும் விதத்தில் புதிய பாடத்திட்டத்தை அமைப்பதும் கல்வித் துறையில் தீர்க்கமான மாற்றங்களை மேற்கொள்வதும் ஒரு நாட்டின் எதிர்காலம் கல்வி மூலமே சிறப்படையும் என்பதை மிக நன்றாகப் புரிந்து வைத்துள்ளதனாலேயேயாகும். இலவசக் கல்வியின் உச்சப் பயனை அனுபவித்து நாட்டிற்கு மாத்திரமன்றி உலகுக்கே செயற்றிறன்மிக்க ஓர் இலங்கைப் பிரசையாக நீங்களும் வளர்ந்து நிற்பதற்கு தீர்மானிக்க வேண்டியுள்ளது. இதற்காக இந்நூலைப் பயன்படுத்தி நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு உங்களுக்கு உதவுமென்பது எனது நம்பிக்கையாகும்.

அரசு உங்கள் கல்வியின் நிமித்தம் செலவிடுகின்ற மிகக் கூடிய நிதித்தொகைக்கு பெறுமதியொன்றைச் சேர்ப்பது உங்கள் கடமையாவதுடன் பாடசாலைக் கல்வியூடாக நீங்கள் பெற்றுக்கொள்ளும் அறிவு மற்றும் திறன்கள் போன்றவையே உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றன என்பதையும் நீங்கள் நன்கு கவனத்திற்கொள்ள வேண்டும். நீங்கள் சமூகத்தில் எந்த நிலையிலிருந்தபோதும் சகல தடைகளையும் தாண்டி சமூகத்தில் மிக உயர்ந்ததொரு இடத்திற்குப் பயணிக்கும் ஆற்றல் கல்வி மூலமாகவே உங்களுக்குக் கிடைக்கின்றது என்பதை நீங்கள் நன்கு விளங்கிக்கொள்ள வேண்டும்.

எனவே இலவசக் கல்வியின் சிறந்த பிரதிபலனைப் பெற்று, மதிப்பு மிக்கதொரு பிரசையாக நாளைய உலகை நீங்கள் வெற்றி கொள்வதற்கும் இந்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் இலங்கையின் நாமத்தை இலங்கச் செய்வதற்கும் உங்களால் இயலுமாகட்டும் என கல்வி அமைச்சர் என்ற வகையில் நான் பிரார்த்திக்கின்றேன்.



**அகில விராஜ் காரியவசம்**
**கல்வி அமைச்சர்**

## முன்னுரை

உலகின் சமூக, பொருளாதார, தொழினுட்ப, கலாசார விருத்தியுடன் சேர்ந்து கல்வியின் நோக்கங்கள் மிக விரிந்த தோற்றமொன்றைப் பெற்றுள்ளன. மானிட அனுபவங்கள், தொழினுட்ப மாற்றங்கள் ஆராய்ச்சி மற்றும் புதிய குறிகாட்டிகளின்படி கற்றல் கற்பித்தல் செயற்பாடும் நவீனமயமாக்கப்பட்டுள்ளது. அதன்போது மாணவர் தேவைக்குப் பொருந்தும் விதமான கற்றல் அனுபவத்தை ஒழுங்கமைத்து கற்பித்தல் செயற்பாட்டை நடைமுறைப்படுத்திச் செல்வதற்கு பாடத்திட்டத்தில் காணப்படுகின்ற நோக்கங்களிற்கிணங்க பாடம் தொடர்பான விடயங்களை உள்ளடக்கிப் பாடநூல்களை ஆக்குவது அவசியமாகும். பாடநூல் என்பது மாணவரின் கற்றல் சாதனம் மாத்திரமல்ல. அது கற்றல் அனுபவங்களைப் பெறுவதற்கும் அறிவு, பண்பு விருத்திக்கும் நடத்தை மற்றும் மனப்பாங்கு வளர்ச்சியுடன் உயர்ந்த கல்வியொன்றை பெற்றுக் கொள்வதற்கும் மிகவும் உதவக்கூடியதுமாகும்.

இலவசக் கல்விக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கில் தரம் 6 முதல் தரம் 11 வரை சுமார் 91 வகையான பாடநூல்கள் அரசினால் உங்களுக்கு வழங்கப்படுகின்றன. அந்நூல்களிலிருந்து உயர்ந்தபட்சப் பயன்களைப் பெற்றுக்கொள்வதுடன், அவற்றைப் பாதுகாப்பதும் உங்களது கடமையாகும் என்பதையும் நினைவூட்டுகின்றேன். பூரண ஆளுமைகொண்ட நாட்டிற்குப் பயனுள்ள சிறந்ததொரு பிரசையாகுவதற்கான பயிற்சியைப் பெற்றுக்கொள்வதற்கு இப்பாடநூல் உங்களுக்குக் கைகொடுக்கும் என நான் எண்ணுகிறேன்.

இப்பாடநூலாக்கத்தில் பங்களிப்புச் செய்த எழுத்தாளர், பதிப்பாசிரியர் குழு உறுப்பினர்களுக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

**டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
இசுருபாய
பத்தரமுல்ல.
*2019.04.10*

## கண்காணிப்பும் மேற்பார்வையும்

**டபிள்யூ. எம். ஜயந்த விக்கிரமநாயக்க**

கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்,

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## வழிகாட்டல்

**டபிள்யூ. ஏ. நிர்மலா பியசீலி**

கல்வி வெளியீட்டு ஆணையாளர் (அபிவிருத்தி),

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## இணைப்பாக்கம்

**காண்டீபன் - 2018**

அபிவிருத்தி அலுவலர்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**லெனின் மதிவானம்**

பிரதிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்,

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## நூலாக்கக் குழு

**எஸ். பவானந்தன்**

விரிவுரையாளர் - கல்வியியல் கல்லூரி வவுனியா.

**கே. கார்த்திகேசு**

அதிபர் - பெட்டிகல தமிழ் வித்தியாலயம், பலாங்கொடை.

**எல்.சிவராஜா**

அதிபர் - எலமான் த.ம.வி, பதுளை.

**சாந்தி ரமேஸ்**

ஆசிரியர் -சைவ மங்கையர் கழகம், கொழும்பு.

## பதிப்பாசிரியர் குழு

**பேராசிரியர் - இரா.வை. கனகரத்தினம்**

பேராசிரியர் - ஓய்வு நிலை.

**எஸ். லலிதாம்பிகை**

பிரதிக் கல்விப் பணிப்பாளர், கல்வி அமைச்சு.

**பொ.ஜெயரூபன்**

செயற்றிட்ட அதிகாரி, தேசிய கல்வி நிறுவகம்.

## பதிப்பாசிரியர் குழு - மொழி

**பா. பாலசிங்கம்**

ஆசிரிய ஆலோசகர்,

வலயக் கல்வி அலுவலகம்,

யாழ்ப்பாணம்.

**சிவபாலசுந்தரம்**

ஆசிரிய ஆலோசகர்,

வலயக் கல்வி அலுவலகம்,

ஹட்டன்.

## சரவை நோக்கு

**என். சகிலா**

அபிவிருத்தி அலுவலர் - கல்வி அமைச்சு.

**ஆர். கவியாழினி**

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## கணினி வடிவமைப்பு

**சந்திராதேவி சரவணகுமார்**

கணினி வடிவமைப்பாளர்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## பக்க வடிவமைப்பு - 2018

**சத்திவேல் சத்தியசீலன்**

பக்க வடிவமைப்பாளர்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## படங்கள்

**என்.ஞானவேல்**

சிரேஷ்ட விரிவுரையாளர்,

யாழ்/ தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்.

**என்.எஸ். ஞானகுருபரன் (ஓவியர்)**

**க. ஸ்ரீஸ்கந்த மூர்த்தி**

ஆசிரியர் - மு/ வற்றாபளை ம.வி முல்லைத்தீவு.

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | விநாயகர் | 1 |
| 2 | சைவ இல்லம் | 6 |
| 3 | நாளாந்த செயன்முறைகள் | 11 |
| 4 | சமூகம் சார்ந்த சமய விழுமியங்கள் | 14 |
| 5 | வாழ்வியல் சடங்குகள் | 29 |
| 6 | விரதங்களும் பண்டிகைகளும் | 33 |
| 7 | திருமுறைத் தொகுப்பு | 38 |
| 8 | இளையான் குடிமாறநாயனார் | 42 |
| 9 | பஞ்சபுராணம் | 46 |
| 10 | ஆலய வழிபாடு | 62 |

| | | |
|---|---|---|
| 11 | சமய குரவர் நால்வர் | 67 |
| 12 | ஞானப்பிரகாச முனிவர் | 75 |
| 13 | முப்பொருள் | 78 |
| 14 | நாட்டார் வழிபாடு | 81 |
| 15 | பறாளை ஈஸ்வர விநாயகர் ஆலயம் | 85 |
| 16 | திருக்கோணேச்சரம் | 90 |
| 17 | மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் | 94 |
| 18 | திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலயம் | 98 |
| 19 | சீதையம்மன் ஆலயம் | 102 |
| 20 | இலங்கையில் உள்ள சமயங்கள் | 106 |

உ

சிவமயம்

# கடவுள் வணக்கம்

திருச்சிற்றம்பலம்

**கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்**
**முப்போது முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை**
**அப்போது மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி**
**எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே**

திருச்சிற்றம்பலம்

# 1 விநாயகர்



*''பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்*
*சரவணவற் புதமலர் தலைக்கணி வோமே''*

என விநாயகப் பெருமான் அதிவீரராம பாண்டியன் இயற்றிய 'வெற்றி வேற்கை' என்ற நூலில் போற்றப்படுகின்றார்.

ஓம் என்னும் பிரணவ மந்திரத்தின் பொருளாய் விளங்கும் கருணை என்னும் பெருந்தகைமையுடைய ஐந்து கைகளுடைய விநாயகப் பெருமானது திருப்பாதங்கள் என்னும் அற்புதமான தாமரை மலர்களை எமது தலைகளிலே சூடிக்கொள்வோம் என்பது இப்பாடலின் பொருளாகும்.

விநாயகப் பெருமானை முதலில் வழிபட்டு, எந்தச் செயலையும் செய்யத் தொடங்குவது சைவ மக்களின் மரபாகும். அவ்வாறு அவரை முறையாக வணங்கி,

எச்செயலைத் தொடங்கினாலும் அது தடையின்றி நிறைவேறும். ஓங்கார வடிவான விநாயகரை வழிபட்டால் எமது அகங்காரம் நீங்கும். தும்பிக்கையானை நம்பிக்கையோடு வழிப்பட்டால் சகல வளங்களும் கிட்டும்.

விநாயகரை கணபதி, விக்னேஸ்வரன், கணேசன், ஆனைமுகன், பிள்ளையார், கஜமுகன் எனப் பல பெயர்கள் கொண்டு வழிபாடு செய்வர். விநாயகப் பெருமானை ஆலயங்களில் பிரதிஷ்டை செய்து வழிபடுவதுடன், வீடு, ஆற்றங்கரை, குளக்கரை, ஆலமரத்தடி, அரசமரத்தடி முதலான இடங்களிலும் அவருக்கு உருவங்கள் அமைத்து வழிபாடு செய்கின்றனர்.

விநாயகப் பெருமானை இலகுவாக வழிபட முடியும். விநாயகர் திருவுருவம் இல்லாத இடத்தில் மஞ்சள், சந்தனம், சாணம் என்பவற்றில் ஏதாவது ஒன்றினால் பிள்ளையார் பிடித்து அதில் அறுகம்புல்லை குத்தி வழிபடுவது சைவர்களின் மரபாகும்.

முன்னொரு காலத்தில் அகத்தியர் தம்முடைய கமண்டலத்தில் கங்கை ஆற்று நீரை அடைத்து பக்கத்தில் வைத்துக் கொண்டு சிவபூசை செய்து கொண்டிருந்தார். அவ்வேளை இந்திரன் பிள்ளையாரை வழிபட்டு அகத்தியரின் கமண்டலத்தின் நீரை வெளியேற்றும்படி வேண்டியதற்கு அமைவாக பிள்ளையார் காக்கை வடிவில் சென்று, அகத்தியரின் கமண்டலத்தில் அமர்ந்தார். அகத்தியர் காகத்தை கையசைத்து விரட்டினார். காக்கை கமண்டலத்தை காலால் உந்திவிட்டுப் பறந்தது. கமண்டலம் கவிழ்ந்தது; கமண்டல நீர் காவிரியாகப் பெருக்கெடுத்தது.

அகத்தியர் கோபத்துடன் காகத்தைத் துரத்த காகமாக இருந்த பிள்ளையார் சிறுவனாக உருமாறி நின்றார். சிறுவனை இரண்டு கைகளாலும் தலையில் குட்ட நினைந்து, சிறுவனை விரட்டிக் கொண்டு ஓடினார். அப்போது பிள்ளையார் தமது உண்மை வடிவைக் காட்ட அகத்தியர் திகைத்தார். பின்னர் அவர் பிள்ளையாரை வணங்கி ''ஓங்காரப் பொருளே, உன்னைச் சிறியவன் எனக்கருதி குட்ட வந்த நானே சிறுவன்' என்று சொல்லித் தலையில் குட்டிக் கொண்டார். அப்போது பிள்ளையார் ''அன்பனே இன்று முதல் எம் திருமுன் பக்தியுடன் நின்று தம் தலையில் குட்டிக் கொள்வோர், கூரிய அறிவும் சீரிய செல்வமும் பெற்று வாழ்வர்'' என்று அருள் புரிந்தார். அன்று முதல் நெற்றியில் மூன்று முறை குட்டி வழிபடுவது வழக்கமாயிற்று.

தோப்புக்கரணம் போடுதலும் பிள்ளையாருக்கே உரிய சிறப்பான வழிபாட்டு முறையாகும். வலக்காதை இடக் கையினாலும், இடக்காதை வலக்கையினாலும் பிடித்துக் கொண்டு, மூன்று முறை தாழ்ந்தெழுந்து வழிபடுதல் தோப்புக்கரணம் போடுதலாகும். அதனுடன் தொடர்புடைய புராணக்கதை ஒன்றும் உண்டு.

முன்னொரு காலத்தில் கஜமுகன் என்னும் அசுரன் தேவர்களைத் தன் அடிமைகளாக்கினான். அவர்களைத் தன் முன் ஆயிரம் முறை தோப்புக்கரணம் போடச்செய்தான். தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட, அவர் கஜமுகாசுரனின் செருக்கை அடக்க விநாயகரை அனுப்பினார். விநாயகர் கஜமுகாசுரனுடன் போர் புரிந்து அவனது உடலைப் பிளந்தார். அவன் பெருச்சாளி உரு எடுத்து விநாயகரை எதிர்த்தான். விநாயகர் அவனுக்கு ஞான உபதேசம் செய்தார். அதனால் செருக்கடங்கிய அவன், விநாயகரைத் தொழுதான். அவர் பெருச்சாளியைத் தனது வாகனமாக்கிக் கொண்டார்.



தேவர்கள், கஜமுகாசுரனுக்குத் தோப்புக்கரணம் போட்ட நிலை மாறி, அவர்கள் விநாகயருக்கு முன் அவ்வாறு செய்யத் தொடங்கினர்.

விநாயகர் மகிழ்ந்து ''இனி என் முன் மூன்று முறை தோப்புக்கரணம் போட்டால் போதும், அவ்வாறு செய்யும் பக்தர்கள் எனது அருளுக்குப் பாத்திரமாவார்கள்'' என்று அருளினார். அதனால் விநாயகருக்கு முன் தோப்புக்கரணம் போட்டு வணங்கும் மரபு ஏற்பட்டது.

விநாயகரைப் பல்வகைப் பூக்களாலும், இலைகளாலும் அர்ச்சிக்கலாம். ஆனால் விநாயகருக்கு மிகவும் விருப்பமானது அறுகம் புல்லே. விநாயகரை வணங்கும் போது அறுகம் புல்லால் அர்ச்சித்து, வழிபடும் போது எமக்கு வருகின்ற துன்பங்கள் யாவும் எளிதாக நீங்கிவிடும்; சகல சௌபாக்கியங்களும் கிட்டும். எனவே நாமும் வேழமுகத்து விநாயகரைத் தொழுது அவரின் நல்லருளைப் பெறுவோம்.

திருச்சிற்றம்பலம்

**விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்**
**விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே**
**விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்**
**கண்ணிற் பணிமின் கனிந்து.**

திருச்சிற்றம்பலம்

## பயிற்சிகள்

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. வெற்றி வேற்கை என்னும் நூலை இயற்றியவர் யார்?
2. ஓம் எனும் பிரணவ மந்திரப் பொருளாய் விளங்குபவர் யார்?
3. பிள்ளையார் வழிபாடு இடம்பெறும் இடங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.
5. விநாயகரை வழிபடுவதனால் கிடைக்கும் பயன்கள் சில கூறுக.

## செயற்பாடு

மஞ்சள், சந்தனம், சாணம் என்பவற்றால் விநாயகர் திருவுருவைப் பிடித்து, விநாயகருக்குரிய வழிபாட்டு முறைகளை மேற்கொள்க.

## பாடச்சுருக்கம்

- ஓம் என்னும் பிரணவ மந்திரத்தின் பொருளாய் விளங்குபவர் விநாயகர்.
- விநாயகர் என்ற சொல்லுக்கு தனக்கு மேல் தலைவர் இல்லாதவர் என்பது பொருளாகும்.
- விநாயகரை ஆலயம், வீடு, ஆற்றங்கரை, குளக்கரை, மரத்தடி, முதலான இடங்களில் வழிபடலாம்.
- விநாயகருக்கு முன் சிதறு தேங்காய் உடைத்தல், நெற்றியில் குட்டிக் கும்பிடுதல், தோப்புக்கரணம் போடுதல் முதலான வழிபாடுகள் செய்யலாம்.

# 2 சைவ இல்லம்



சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டவர்கள் சைவசமயத்தவர்களாவர். சைவர்களுக்கென்று தனிப்பண்புகள் காணப்படுகின்றன. இப்பண்புகள் சிறுவயதி லிருந்தே வளர்த்தெடுக்கும் (சைவ) இல்லமானது முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இது சைவர்கள் வாழும் இடம் என்பதால் இதனை சைவ இல்லம் என்று அழைப்போம்.

ஒரு சைவ இல்லம் புனிதமும், பண்பும் நிறைந்த இடமாகும். அது தெய்வீக சந்நிதியாகவும், கலைக்கோயிலாகவும், நற்பழக்கவழக்கங்களுக்குப் பயிற்சிநிலைய மாகவும் அமைந்திருக்கும்.

சைவர்களின் வீடுகளில் அன்றாடம் கடைப்பிடிக்க வேண்டிய பழக்க வழக்கங்கள் பல உள்ளன. விளக்கேற்றுதல், இறை வழிபாடு செய்தல், திருமுறை ஓதுதல், பெற்றோரை வணங்குதல் என்பன அவற்றுள் சிலவாகும். அவற்றை முறையாகக் கடைப்பிடித்து வாழப் பழகிக்கொள்ள வேண்டும்.

சைவர்களின் இல்லங்களில் தெய்வ வணக்கத்திற்கென்று ஓர் அறை அல்லது ஓரிடம் ஒதுக்கப்பட்டிருக்கும். அங்கே அவர்களின் இஷ்ட தெய்வங்களின் படங்களோ, விக்கிரகங்களோ வைக்கப்பட்டிருக்கும். அன்றாடம் நீராடி, திருநீறு தரித்து அத்தெய்வங்களை காலையும், மாலையும் திருவிளக்கேற்றி, நறுமலர் வைத்து, தூபமிட்டு, தோத்திரம் ஓதி இறைவழிபாடு செய்வர். இது சைவர்களின் முக்கிய கடமை ஆகும்.

விளக்கேற்றுவதற்கு பித்தளை, செம்பு, வெள்ளி என்னும் உலோகங்களில் ஒன்றினால் அமையப்பெற்ற விளக்குகளையோ மண் விளக்குகளையோ பயன்படுத்தலாம்.



திருவிளக்கில் ஐந்து சுடர்கள் இருப்பது சிறந்ததாகும். நாள்தோறும் வழிபடும் வழிபாட்டில் ஒரு சுடர் இருப்பதும் போதுமானதாகும். விளக்கேற்றுவதற்கு நெய், நல்லெண்ணெய், தேங்காயெண்ணெய் போன்ற எண்ணெய் வகைகளுள் ஒன்றினைப் பயன்படுத்தி பஞ்சி னால் திரியிட்டு, விளக்கேற்றி இறை வழிபாட்டில் ஈடுபடுதல் வேண்டும். இறைவழிபாட்டின் போது, குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து வழிபாட்டினை மேற்கொள்வது சிறப்பானதாகும். வழி பாட்டின் போது எமக்கா கவும், குடும்பத்தவர், அயலவர், நண்பர் அனை வரும் நலமாகவும், நல்லவர் களாகவும் வாழப் பிரார்த்திக்க வேண்டும்.

இறை வழிபாட்டின் போது திருமுறைப் பாடல் களை ஒழுங்கு முறையில் பாடி வழிபட வேண்டும் என்பது நியதியாகும். இவ்வகையில் தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம்ஆகியபஞ்சபுராணங்களைமுறையாக ஓதுதல் வேண்டும். தோத்திரங்களை ஓதும் போது முதலில் 'திருச்சிற்றம்பலம்' என்று

சொல்வதும் அவற்றை ஓதிய பின் 'திருச்சிற்றம்பலம்' என்று கூறி நிறைவு செய்வதும் சைவமரபாகும். தோத்திரங்களை ஓதும் போது எழுந்து நின்று கைகூப்பி பக்தியோடும், பண்ணோடும் ஓதுதல் வேண்டும். நாம் நல்லொழுக்கம், மனச்சாந்தி பெறவும், பாவத்தைப் போக்கி நல்வாழ்வைப் பெறவும், தினமும் இறைவழிபாடு செய்தல் வேண்டும். திருமுறைகளை ஓதுதல் சைவர்களாகிய எமது கடமையாகும்.

நாம் காலையும், மாலையும் இறைவனை வழிபட்ட பின் நமது கண்கண்ட தெய்வங்களான பெற்றோர்களின் கால்களிலும் வீழ்ந்து வணங்கி அவர்களின் ஆசீர் வாதத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும். தாய், தந்தையரின் ஆசீர்வாதம் எம்மை நன்கு வாழ வைக்கும்.

அத்துடன் பெற்றோர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்யவும் சிறு வயதிலிருந்தே நாம் பழகிக் கொள்ளுதல் வேண்டும். இத்தகைய பழக்கங்கள் அன்பு, பொறுமை, பக்தி, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு முதலிய குணங்களை வளர்ப்பதற்கு உதவும்.

இத்தகைய நல்ல பண்புகளை வளர்த்தெடுக்கும் இல்லத்தில் அன்பும், சமாதானமும், ஒற்றுமையும் நிலைத்து நிற்கும். எனவே நாமும் அன்றாடம் எமது இல்லத்தில் திருவிளக்கேற்றி இறைவனைத் தொழுது நல்லவர்களாக வாழ்வோம்.

## விஷேட தினங்களின் போது கடைப்பிடிக்கும் பழக்கவழக்கங்கள்

மனிதர்களாய் பிறந்த அனைவரும் பிறவிப் பயனை எய்தும் பொருட்டு பல நற்செயல்களைச் செய்கின்றனர். அவ் வகையில் இச்செயல்கள் யாவும் சைவசமயத்தை அடித்தளமாகக் கொண்டு அமைந்து காணப்படுகின்றன. சைவ இல்லங்களில் நாளாந்தம் இடம் பெறும் செயற்பாடுகள் இறை சிந்தனையுடன் கூடியனவாய் அமைவது போல விஷேட தினங்களான பண்டிகைகள், விரதங்கள், மங்கலச் சடங்குகள் என்பன இறை சிந்தனைக்கும், சைவ சமயப் பாரம்பரியங்களைப் பேணி வாழ்விற் கடைப்பிடிப்பதற்கும் பெரிதும் உதவுகின்றன.

தைப்பொங்கல், புதுவருடப்பிறப்பு, தீபாவளி முதலிய பண்டிகைகளும், நவராத்திரி, சிவராத்திரி, விநாயகசதுர்த்தி என வரும் விரத காலங்களும், பெயர்

சூட்டுதல், ஏடு தொடங்குதல், திருமண சடங்கு போன்ற மங்களச் சடங்குகளும் சைவ இல்லங்களில் விஷேட தினங்களாக அனுட்டிக்கப்படுகின்றன. இக்காலங்களில் நாம் கடைப் பிடிக்க வேண்டிய சைவப் பழக்கவழக்கங்கள் பல உள்ளன. அவற்றை நாம் அறிந்து கொள்வோம்.

பண்டிகைகள், விழாக்கள், விரதங்கள் ஆகியவற்றிற்குரிய விசேட காலங்களில் நாம் நமது வீடுகளையும், சுற்றுப்புறங்களையும் தூய்மைப் படுத்துகின்றோம். நாமும் நீராடி, புத்தாடை அணிகின்றோம். வீட்டு வாசலில் கோலம் போடுதல், நிறைகுடம் வைத்தல், மாவிலை தோரணம் கட்டுதல் முதலானவற்றையும் இறைசிந்தனையுடன் செய்கின்றோம். புதிய பாத்திரங்களில் உணவைச் சமைத்து, இறைவனுக்கு நிவேதன மாக்கி, திருவிளக்கேற்றி, தூபமிட்டு இறைவனை வழிபாடு செய்கின்றோம். இறை வனுக்குப் படையல் இட்டு நிவேதனமாக்கிய உணவை ஏழை எளியவர்களுக்கு பகிர்ந்தளிப்பதும், உறவினர் சூழ உண்பதும் சைவமக்களின் பழக்கமாகும்.

இத்தகைய சைவப் பழக்க வழக்கங்கள் போற்றிப் பேணப்பட வேண்டியவை ஆகும். எனவே சைவசமயப் பழக்கவழக்கங்களை வீடுகளில் நாம் முறையாக கடைப் பிடிப்போம்.

## பயிற்சிகள்

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. நீங்கள் அன்றாடம் வீட்டில் கடைப்பிடிக்கும் சமய பழக்க வழக் கங்களைக் குறிப்பிடுக.

2. திருவிளக்கேற்றுவதற்குப் பயன்படுத்தக் கூடிய எண்ணெய் வகைகள் எவை?

3. பஞ்ச புராணங்கள் எவ்வொழுங்கில் பாடப்பட வேண்டும்?

4. சைவசமயத்தவரின் விஷேட தினங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

5. விஷேட தினங்களின்போது வீட்டில் பின்பற்றக்கூடிய சமயப் பழக்க வழக்கங் களைக் கூறுக.

# 3 நாளாந்த செயன்முறைகள்

'அரிது அரிது மானுடராதல் அரிது' என்றார் ஔவையார். இத்தகைய கிடைத்தற்கரிய மானிடப்பிறவியை எமக்கு அளித்தவர் பரம்பொருளாகிய சிவபெருமான் ஆவார். அவரின் திருவடிகளை அடைவதற்காகவே நாம் மானிடப் பிறவி எடுத்தோமாதலால், அத்திருவடிகளைச் சிந்தித்தலும், துதித்தலும், வணங் குதலுமே நமது முக்கியமான கடமை ஆகும். அவ்வாறு இறைவனை நினைப்பதற்கு ஏற்ற வழிமுறைகளை நம் முன்னோர்கள் கூறி உள்ளார்கள். அவற்றை நாம் முறையாகக் கடைப்பிடித்து வந்தால் நாம் வாழ்வில் உயர முடியும்.

நாம் தினந்தோறும் சூரியன் உதிப்பதற்கு முன் நித்திரை விட்டெழுதல் வேண்டும். எழும்போது ''சிவசிவ'' என்று கூறி இறைவனை மனதில் தியானித்தல் வேண்டும். பின் காலைக் கடன்களை முடித்து, நீராடி தூய ஆடை அணிதல் வேண்டும். திருநீறு முதலான சிவ சின்னங்களைச் சிவசிந்தையுடன் தரித்துக் கொண்டு இறைவனை வழிபடல் வேண்டும்.

விபூதி, உருத்திராக்கம் என்பன எமது அஞ்ஞானத்தைப் போக்கி தீமைகளி னின்றும் எம்மைப் பாதுகாத்து இறைவனையும், அவனதுபெருங்கருணையையும் நினைவூட்டும் சாதனங்கள் ஆகும். இவற்றை நீராடியவுடனும், பூசை வழிபாடுகள் செய்யும் நேரங்களிலும் பக்தி சிரத்தையுடன் தரித்துக் கொள்ளல் வேண்டும்.



திருநீற்றை உத்தூளனமாகவோ, திரிபுண்டரமாகவோ தரித்தல் வேண்டும். திருநீற்றை பரவிப் பூசுதலை உத்தூளனமெனவும் திருநீற்றை மூன்று குறியாகத் தரிப்பதனை திரிபுண்டரம் எனவும் கூறுவர்.

திருநீறு அணியும் போது உத்தம திக்குகளான வடக்கு முகமாகவேனும், கிழக்கு முகமாகவேனும் இருந்துகொண்டு தரித்தல் வேண்டும். அதனைத் தரிக்கும் போது சிவனை நினைத்து நிலத்திலே சிந்தாவண்ணம் அண்ணாந்து ''சிவ சிவ'' என்று கூறி வலக்கையின் நடுவிரல் மூன்றினாலும் தரித்தல் வேண்டும்.

இறைவனை வழிபடும்போது அன்றலர்ந்த புதிய பூக்களை இறைவனின் திருவடிகளுக்குச் சூட்டி, தூப தீபங்காட்டி, திருமுறைப் பாடல்களை அன்புடன் மனம் கசிந்துருகிப் பாடி வழிபடுதல் வேண்டும். வழிபாட்டின் போது நமது நலத்திற்காக இறைவனிடம் பிரார்த்திப்பதைப்போல் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் நோய் நொடிகள் இன்றி நலமாகவும், வளமாகவும், நல்லவர்களாகவும் வாழப் பிரார்த் திக்க வேண்டும்.

காலையும், மாலையும் இறைவனை வழிபட்ட பின் பெற்றோர்களின் கால்களில் வீழ்ந்து வணங்குதல் வேண்டும்.

மேலும் நாம் உணவு உண்ணத் தொடங்கும் முன்பு ''அன்னம் பாலிக்கும்...'' என்ற தேவாரத்தைப் பாடி இறைவனை நினைத்து வணங்குதல் வேண்டும். அத்துடன் நாம் உண்ணும் உணவில் ஒருபகுதியை பசு, காகம், கோழி முதலிய பிராணிகளுக்கு இடுவதும் உணவு இல்லாத ஏழை ஒருவனுக்கு ஒரு நேர உணவையாவது வழங்குவதும் நல்ல பண்புகளாகும்.

இத்தகைய நல்ல பண்புகள் எம்மை நல்வழியில் வாழ வழி காட்டும். பிறவித் துன்பத்திலிருந்து நீக்கி இறைவனோடு சேர்க்கும். பேரின்பப் பெருவாழ்வைக் கொடுக்கும். எனவே சைவசமய ஒழுங்கு முறைகளை வாழ்வில் கடைப்பிடித்து இறைவனுடைய அருளைப் பெறுவோமாக.

## பயிற்சிகள்

**சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுக.**

1. பிறவியை எமக்களித்தவர் பரம்பொருளாகிய சிவபெருமான் ஆவார்.
2. இறைவனை நினைப்பதற்குரிய ஏற்ற வழிமுறைகளை நம் முன்னோர்கள் ஒழுங்குபடுத்தவில்லை.
3. விபூதி, உருத்திராக்கம் என்பன சிவசின்னங்களாகும்.
4. திருநீற்றை தெற்குமுகமாக இருந்து தரித்தல் வேண்டும்.
5. நமக்காக இறைவனிடம் பிரார்த்திப்பதைப் போல் பிறருக்காகவும் பிரார்த்தித்தல் வேண்டும்.

## செயற்பாடு

1. திருநீற்றின் சிறப்பு பற்றிய திருமுறைப்பாடல்களை எழுதி, வகுப்பறையில் காட்சிப்படுத்துக.
2. திருநீற்றை உத்தூளனம், திரிபுண்டரம் ஆகிய முறைகளில் முறைப்படி தரித்துக் காட்டுக.

## பாடச்சுருக்கம்

- இறைவனின் திருவடிகளைச் சிந்தித்தலும், துதித்தலும், வணங்குதலும் நமது முக்கியமான கடமையாகும்.
- நாம் இறைசிந்தனையுடன் நாளாந்தக் கடமைகளைச் செய்ய வேண்டும்.
- கடவுளைத் தியானித்தல், புனிதம் பேணல், சிவசின்னங்களைத் தரித்தல், கடவுளையும், பெற்றோரையும் வழிபடுதல், ஏழை களுக்கு உதவுதல் என்பன நாம் தினந்தோறும் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகளாகும்.

# 4 சமூகம் சார்ந்த சமய விழுமியங்கள்

மனித வாழ்வை மேம்படுத்தும் வகையில் கடைப்பிடிக்கப்படும் பெறுமதிமிக்க வாழ்க்கைப் பண்புகள் விழுமியங்கள் எனப்படும். உயர்வானவை, மேன்மையானவை, உன்னதமானவை, அவை உயிரினும் மேலான பெறுமதியுடையவை.

'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்'

என்பது திருக்குறள். ஒழுக்கம் மேன்மையானது அதுவும் எம்மால் பெரிதும் மதித்துப் பெறுமானம் மிக்கதெனப் போற்றப்படுகின்ற எம் ஆருயிரை விட அதிமேன்மையானது என்றார் வள்ளுவப் பெருந்தகை. எனவே ஒழுக்கம் ஒரு விழுமியம் ஆகும்.

நாம் எவற்றை இழக்கினும் உயர்ந்த மனித விழுமியங்களை இழந்து விடலாகாது. ஆதலால் நாம் மனிதர்களே என்று எம்மை அடையாளம் காட்டும் மனித விழுமியங்களை நாம் எஞ்ஞான்றும் போற்றிப் பேணிப் பாதுகாத்து வருதல் இன்றியமையாததாகும்.

இவ்வகையில் சமயம் சார்ந்த மனிதப் பண்புகளுள் சிலவற்றைச் சுருக்கமாக இங்கு நோக்குவோம்.

## சமய விழுமியங்கள்

### (அ) உண்மை பேசுவோம்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் எழுதிய நூல்களில் பாலபாடமும் ஒன்றாகும். அவரது இரண்டாம் பாலபாடத்தில் 'மெய்ம்மை' என்னும் கதை உள்ளது. அக்கதை சமய விழுமியப் பண்புகளில் ஒன்றான உண்மை பேசுதலின் சிறப்பினைப் பற்றி விளக்குகின்றது. அக்கதை வருமாறு.

ஒருநாள் விடியற்காலையில் முருகன், கிருஷ்ணன் என்னும் இரண்டு சிறுவர்கள் ஒரு சந்தைக்குப் போய், தங்களுடைய சிறிய கடைகளில் தாங்கள் கொண்டு சென்ற பொருள்களைப் பரப்பி வைத்து, விற்பதற்காக உட்கார்ந்தார்கள். ஒரு கடையில் பழங்களும் காய்கறிகளும், மற்றொன்றில் தேங்காயும் வைக்கப்பட்டிருந்தன. சந்தை கலையும் நேரம்.

இந்தச் சிறுவர்களிடமும் பல பேர் பொருள்களை வாங்கிக் கொண்டு போனார்கள்.

முருகனுடைய கடையில் எல்லாம் விற்றுக் கடைசியாய் ஒரு முலாம்பழம் மாத்திரம் இருந்தது. ஒரு பெரிய மனிதர் வந்து, கையை அந்த முலாம்பழத்தின் மேல் வைத்து, எவ்வளவு பெரிய முலாம்பழம்! இதற்கு என்ன விலை? என்று கேட்டாார்.



இந்த முலாம்பழம் ஒன்றுதான் என்னிடத்தில் மிகுந்தது; இது நல்ல பழம்போல் தோன்றினாலும் இதில் கொஞ்சம் பழுது இருக்கிறது. ஐயா என்று சொல்லி, சிறுவன் அந்தப் பழத்தை மறுபுறம் திருப்பிக் காட்டினான். ஆமாம்! பழுது இருக்கின்றது! எனக்கு அது வேண்டாம் என்று சொன்ன, அந்தப் பெரியமனிதர், அந்தச் சிறுவனுடைய அழகிய வஞ்சகமில்லாத முகத்தைப் பார்த்து, 'உன்னுடைய பழத்திலுள்ள பழுதை வாங்க வருப வர்களுக்குக் காட்டுவது, விற்க வந்த உனக்கு ஆகுமா?' என்று கேட்டார்.

''பொய் சொல்வதைப் பார்க்கிலும் இது நல்லது, ஐயா'' என்று அந்தச் சிறுவன் பணிவுடன் சொன்னான். 'நீ சொன்னது சரி, தம்பி, ஒருபோதும் அதை மறவாதே; நான் உன்னுடைய கடையை இனி மறவேன்' என்று சொல்லி அந்தப் பெரியமனிதர் கிருஷ்ணன் கடைப் பக்கம் திரும்பி, ''இது என்ன நல்ல தேங்காயா?'' என்று கேட் டார். ''ஆம், ஐயா, நல்ல தேங்காய். நேற்றுத்தான் பிடுங்கியது. நான்தான் உரித்தேன்'' என்று கிருஷ்ணன் மறு மொழி சொன்னான். அந்தப் பெரியமனிதர் அதை வாங்கிக் கொண்டு வீட்டுக்குப் போனார்.

முருகா, நீ பெரிய மூடன்; முலாம் பழத்திலுள்ள பழுதை அந்த மனிதருக்குக் காட்டுகிறதா!



நீ சொன்ன உண்மைக்காக அந்தப் பழத்தை இனி வீட்டுக் குக் கொண்டு போ, அல்லது எங்கேயாவது எறிந்துவிடு. அந்த முட்டுக்காயை வாங்கிக் கொண்டு போகின்றாரே, அவர் அதைப் பற்றி என்ன அறிந்துவிட்டார்? நல்ல தேங்காய்கள் விற்ற விலைக்கே அதையும் விற்றேன். நீயும் அந்த முலாம்பழத்தை அவருக்கு விற்றிருந்தால் ஒன்றும் பாராமல் அதனை வாங்கிக் கொண்டு போயிருப்பார்.'' என்று கிருஷ்ணன் முருகனிடம் கூறினார்.

''கிருஷ்ணா, எனக்கு இன்று காலையில் கிடைத்த காசைப் போல இரண்டு காசுதான் வந்தாலும், நான் ஒரு போதும் பொய் சொல்லவும் மாட்டேன், பொய்யாய் நடக்கவும் மாட்டேன். அல்லாமல், இது கடைசியிலே எனக்குத்தான் நயம். எனக்கு ஒரு வாடிக்கையாளர் அகப்பட்டார் உனக்கொருவர் போய் விட்டார்!'' என முருகன் கூறினார்.

அது அப்படியே நடந்தது. மறுநாள் அந்தப் பெரியமனிதர் தனக்கு வேண்டிய பழங்களையும் காய்கறிகளையும் முருகனிடத்திலேயே வாங்கினார்; கிருஷ்ணனுடைய கடையில் வாங்கவில்லை. இந்த விதமாகவே அந்த வருடம் கழிந்தது. முருகனிடத்தில் எப்போதும் நல்ல பொருள் வாங்கலாம் என்று கண்டு கொண்ட அவர், அவனுடைய கடைக்கே எப்போதும் போவார். சிலவேளை அவனிடத்தில் ''அடுத்த வருடம் நீ என்ன செய்யப் போகிறாய்'' என்று விசாரிப்பது வழக்கம்.

அடுத்த வருடம் அந்தப் பெரிய மனிதருடைய பண்டகசாலையில் ஒரு நம்பிக்கையான சிறுவன் வேண்டியிருந்தது; அவர் முருகனைப் பார்க்கிலும் வேறொருவன் அகப்படான் என நினைத்து, முருகனுக்கே அந்த வேலையைக் கொடுத்தார். அவன் தன் எசமானுக்குத் தன்னிடத்தில் மேலும் மேலும் நல்ல எண்ணம்

வரும்படி நடந்து, ஒவ்வொரு பதவியாக உயர்ந்து, கடைசியில் எசமானோடு வர்த்தகத்தில் ஒரு பங்காளி ஆனான்.

'உண்மை பேசி உத்தமராக வாழ்வோம்'

## பயிற்சிகள்

**1. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

i. 'உண்மை' என்பதற்கு வேறு பெயர் தருக.

ii. முருகனிடம் காணப்பட்ட இரண்டு நல்ல பண்புகளைத் தருக.

iii. உண்மை பேசியதால் முருகனுக்குக் கிடைத்த நன்மைகள் இரண்டினை எழுதுக.

iv. பொய் பேசியதால் கிருஷ்ணனுக்கு ஏற்பட்ட நட்டம் யாது?

**2. கீழே கொடுக்கப்பட்ட சொற்களைக் கொண்டு, வெற்றிடங்களை நிரப்புக.**

**நல்ல, நம்பிக்கையான, உண்மை, பொய்**

i. சமய விழுமியப் பண்புகளில் ____________ பேசுதலும் ஒன்றாகும்.

ii. ' ____________ சொல்வதைப் பார்க்கிலும் இது நல்லது ஐயா' என்று முருகன் சொன்னான்.

iii. முருகனிடம் ____________ பொருள் வாங்கலாம் என்று பெரிய மனிதர் கண்டு கொண்டார்.

iv. பெரிய மனிதருக்கு ____________ சிறுவன் வேண்டியிருந்தது.

## செயற்பாடு


1. இக்கதையில் வரும் முருகன், கிருஷ்ணன் என்னும் இருவரில் யார் உங்களைக் கவர்ந்தவர்? அதற்கான காரணங்கள் இரண்டு தருக.
2. உண்மை பேசி நன்மையை அடைந்த அரிச்சந்திரன் கதையைத் தேடி அறிக.
3. உண்மையை வலியுறுத்தும் திருக்குறள்களை வகுப்பறையில்காட்சிப்படுத்துக.

## பாடச்சுருக்கம்

- ஆறுமுகநாவலர் எழுதிய இரண்டாம் பாலபாடத்தில் மெய்ம்மை என்னும் கதை உண்டு.
- உண்மை பேசியவருக்கு இலாபமும், பொய் பேசியவருக்கு நட்டமும் கிடைத்ததைக் கதை மூலமாக, உணர முடிந்தது.
- உண்மையே இறுதியில் வெற்றி பெறும்.
- நாமும் உண்மையைப் பேசி, நன்மையைப் பெற வேண்டும்.

## (ஆ) பெரியோரைக் கனம் பண்ணுதல்





எமது சமயத்திலுள்ள விழுமியப் பண்புகளில் பெரியோரைக் கனம் பண்ணுதல் என்பது சிறந்த பண்பாகும். அவ்வாறான நற்பண்புகளை சிறுபராயத்திலிருந்தே கடைப்பிடிக்க வேண்டும்.

பெற்றோர், குரு, வயதில் மூத்தோர் முதலானோர் 'பெரியோர்' என அழைக்கப் படுகின்றனர். உங்கள் வீட்டில் அப்பா, அம்மா, அக்கா, அண்ணா ஆகியோர் அவர்களை விட வயதில் மூத்தவர்களுக்கு மதிப்புக் கொடுத்து நடப்பதைக் கண்டிருப்பீர்கள். அதனை நீங்களும் பின்பற்றி நடக்க வேண்டும்.

உங்களிற் பலர் காலையிலும் மாலையிலும் இறைவனை வழிபட்ட பின்னர், உங்கள் பெற்றோர்களின் கால்களில் வீழ்ந்து வணங்குகின்றீர்கள். அது மட்டும் போதாது. அவர்களின் சொற்கேட்டு, கீழ்ப்பணிந்து நடக்க வேண்டும். நமக்கு நன்மை தரும் விடயங்கள் எவை என்பது நமது பெற்றோருக்குத் தெரியும். அதனால், அவர்களது வார்த்தைகளைக் கேட்டு நடப்பது நல்ல பண்பாகும்.

சைவ சமயி ஒருவரின் கடமைகளில் பெரியோர்களைக் கனம் பண்ணுதல், பெற்றோரைப் பேணல் என்பன மிக முக்கியமானவையாகும். நீங்கள் பிறந்த திலிருந்து, பெற்றோரே உங்களைப் பேணுகின்றனர். உங்களின் நலனுக்காக மிகுந்த கஷ்டப்படுகின்றனர். நீங்கள், உங்களுக்குத் தேவையான அனைத்திற்கும் பெற்றோர் களையே சார்ந்திருக்கின்றீர்கள்.

பெற்றோர் செய்யும் இத்தகைய உதவிகளைப் பெற்ற, நீங்கள் பெரிய வராகும்போது, அவர்கள் முதியவர்களாகி விடுகின்றனர். அப்பொழுது, அவர்களைப் பேணும் பொறுப்பு உங்களுக்கே உரியது. இப்போதிருந்தே உங்களால் செய்யக்கூடிய சிறு சிறு உதவிகளை அவர்களுக்குச் செய்யுங்கள். தினமும் வீட்டைச் சுத்தம் செய்தல், உணவு உண்ட பாத்திரத்தைக் கழுவி வைத்தல் முதலானவை அவற்றுள் சிலவாகும். அதனால் உங்கள் பெற்றோர், பெரியோர் அனைவரும் மகிழ்ச்சி அடைவார்கள்.

நாம் கனம் பண்ண வேண்டிய பெரியோர்களில் குரு முதன்மை யானவர். குரு என்பது ஆசிரியரைக் குறிப்பதாகும். ஆசிரியரிடம் மரியாதையுடனும் பக்தியுடனும் நடந்து கொள்ள வேண்டும். அவர்கள் வகுப்பறைக்குள் வரும்போது எழுந்துநின்று வணக்கம் செலுத்துதல், அவர்கள் கற்பிக்கும் விடயங்களை ஆர்வத்துடன் கற்றல், அவர் தரும் பணிகளை ஒழுங்காகச் செய்துவருதல் முதலியவற்றினூடாக அவர்களைக் கனம் பண்ணலாம். அவர்களை வேறு இடங்களில் காணும் போதும் வணக்கம் கூறி, மரியாதை செலுத்துதல் வேண்டும். ஆலயங்களிலுள்ள சமய மதகுருமாருக்கும் மதிப்பளிக்க வேண்டும். அவர்கள் விபூதிப் பிரசாதம் தரும்போது கும்பிட்டு இரு கை களாலும் வாங்க வேண்டும்.

உங்களுடைய வீட்டுக்குப் பெரியோர் வருவதைக் கண்டவுடன் இருக்கையை விட்டு எழ வேண்டும். முகமலர்ந்து இனிய சொற்களைக் கூறி அடக்கத்துடன் அவர்களை வரவேற்று, பணிவிடை செய்ய வேண்டும். அவர்கள் வீட்டைவிட்டு வெளியே செல்லும்போது, அவர்களுடன் வாயில் வரை சென்று வழியனுப்ப வேண்டும். விழாக்கள், பண்டிகைகள் நடைபெறும்போது, பெரியவர்களைத் தேடிச் சென்று, அவர்களுடைய ஆசீர்வாதத்தைப் பெறல் வேண்டும். பேரூந்து, புகைவண்டி போன்ற வற்றில் பயணம் செய்யும்போது, பெரியவர்கள், வயதானவர்கள் வந்தால், எழுந்து அவர்களுக்கு ஆசனத்தைக் கொடுத்தல் வேண்டும். நாம், பெரியோர்களுக்கு முன்னால் செய்யத்தகாத செயல்கள் பல உள்ளன. உயர்ந்த ஆசனத்தில் இருத்தல், காலை நீட்டிக் கொண்டிருத்தல், கால் மேல் கால் போட்டுக்கொண்டிருத்தல், எதிர்த்துப் பேசுதல், கை காட்டிப் பேசுதல் என்பன அவற்றுட் சிலவாகும். அவற்றைத் தவிர்த்து, பெரியோரைக் கனம்பண்ணுவோம். அவர்களின் ஆசிர்வாதத்தைப் பெற்று நலமாக வாழ்வோம்.

## பயிற்சிகள்

**1. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

i. பெரியோர் எனக் குறிப்பிடப்படுபவர்கள் யாவர்?

ii. உங்கள் வீட்டிலுள்ள பெரியோர்களுக்கு நீங்கள் எவ்வாறான உதவிகளைச் செய்கின்றீர்கள்?

iii. 'குரு' என அழைக்கப்படுபவர் யாவர்?

iv. பெரியோர் முன்னால், தவிர்க்க வேண்டிய செயல்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

**2. தரப்பட்டுள்ள சொற்களை வைத்து, வெற்றிடங்களை நிரப்புக.**

**எழுந்து நின்று, கனம் பண்ணுதல், ஆசீர்வாதம், மதிப்பு, மதகுருமாருக்கு**

i. சமய விழுமியப் பண்புகளில் பெரியோரைக் ______________ சிறந்த பண்பாகும்.

ii. வீட்டிலுள்ள பெரியவர்களுக்கு ______________ அளிக்க வேண்டும்.

iii. ஆசிரியர் வகுப்பறைக்குள் வரும் போது ______________ வணக்கம் செலுத்துதல் வேண்டும்.

iv. நமது ஆலயங்களிலுள்ள ______________ மதிப்பளிக்க வேண்டும்.

v. பண்டிகை நாளில் பெரியோரை வணங்கி, அவர்களிடம் ______________ பெற வேண்டும்.

## செயற்பாடு

1. உங்கள் வீட்டிற்குப் பெரியவர் ஒருவர் வருகிறார். அப்பெரியவர் உங்கள் வீட்டில் இருந்து செல்லும் வரை, அப்பெரியவரை எவ்வாறு கனம் பண்ணுவீர்கள் என்பதை எழுதுக.

2. பாடசாலையில் அதிபர், ஆசிரியர் முதலானோரை எவ்வாறு கனம் பண்ணுகிறீர்கள் என்பதைச் சுருக்கமாக எழுதுக.

3. பெரியோருக்கு முன்னால் செய்யத்தகாத செயல்கள் உங்களிடம் உள்ளதா என்பதை அவதானிக்குக. அச்செயல்களைத் தவிர்க்குக.

4. நாள்தோறும் காலையும் மாலையும் பெற்றோரை வீழ்ந்து வணங்குக.

## பாடச்சுருக்கம்

- நாம் பெற்றோர், குரு (ஆசிரியர்), வயதில் மூத்தோர் ஆகியோரைக் கனம் பண்ணுதல் வேண்டும்.
- வீட்டிலும், பாடசாலையிலும்,கோயிலிலும்,பயணம் செய்யும் போதும் பெரியோரைக் கனம்பண்ணச் சந்தர்ப்பங்கள் உள்ளன.
- வீட்டிற்கு வரும் பெரியவர்களுக்குச் செய்யக்கூடிய பல நல்ல செயல்கள் உள்ளன.
- பெரியோர்களின் ஆசீர்வாதம் நமக்கு நன்மை தரும்.
- பெரியோர் முன் செய்யத்தகாத செயல்கள் பல உள்ளன. அவற்றை நாம் தவிர்த்தல் வேண்டும்.

## (இ) நன்றி மறவாமை



சமயம் சார்ந்ததும் மனிதப் பண்புகளுள் ஒன்றான நன்றி மறவாமை பற்றி வியாசர் கூறிய கதையினை கற்போம்.

காசி நகரின் எல்லைப் பகுதியில் இருந்த வனத்திற்கு வேடன் ஒருவன் வேட்டையாட வந்தான். பயங்கரமான விஷம் தோய்த்த அம்பு ஒன்றைத் தன் வில்லில் பொருத்திக் கொண்டு,விலங்கு ஏதாவது அகப்பட மாட்டாதா? என்று காத்திருந்தான். வெகு நேரத்திற்குப் பின்னர் அந்தப்பக்கமாக மான் ஒன்று ஓடி வந்தது. வேடனும்

அதைத் துரத்திக் கொண்டு போய் அம்பை எய்தான். ஆனால் அந்த அம்பு குறி தவறிப்போனது.குறி தவறிய அம்பானது, ஒருமரத்தில் பாய்ந்து ஆழமாகப் பதிந்தது.

அந்த மரம் செழித்து வளர்ந்திருந்த மரமாகும். காய் கனிகளுடன் பூத்துக்கு லுங்கி, பல பறவைகளுக்கு அடைக்கலம் கொடுத்து வந்தது. அம்பு பாய்ந்ததும், விஷத் தின் வீரியத்தால், அந்த மரம் கொஞ்சங் கொஞ்சமாகக் களையிழந்து பட்டுப்போனது. தன் செழுமையை இழந்த காரணத்தால் அந்த மரத்தில் அதுவரை இருந்த அனைத்துப் பறவைகளும் வேறொரு இருப்பிடத்தைத் தேடிப் புறப்பட்டுச் சென்று விட்டன.

## தேவேந்திரனின் வியப்பு

மரம் வளமிழந்த நிலையிலும், அந்த மரத்தின் பொந்தில் இருந்த ஒரு கிளி மட்டும் அங்கேயே இருந்தது. காய்கனிகள் மரத்தில் கிடைக்காமல் போனதால், உணவில்லாமல் அந்தக் கிளியும் தன்பலத்தை இழக்க ஆரம்பித்தது. மிகவும் தொய்ந்து போன நிலையிலும், கிளி அந்த மரத்தை விட்டு அகலாமல் இருந்தது.

இப்படிப்பட்ட நிலையில் அந்த மரத்தையும், அதில் வசித்து வந்த கிளியையும் தேவர்களின் அரசனான தேவேந்திரன் கவனித்தான். அவனுக்கு பெரும் வியப்பு ஏற்பட்டது. மனிதர்களே கருணை இல்லாமல் இருக்கும் இந்தக் காலத்தில் இப்படி ஒரு கிளியா? எல்லா உயிர்களிடத்துமே குற்றமும், குணமும் சேர்ந்தே இருக்கும் என்பது இதில் இருந்து புலனாகிறது என்று ஆச்சரியப்பட்டான் இந்திரன். உடனடியாக மானிட வடிவம் பூண்டு,கிளி வசித்து வந்த பட்டுப்போன மரத்தை நோக்கி நடந்தான்.

''தேவேந்திரனுக்கு நல்வரவு'' என்றது கிளி. ஆச்சரியமும் வியப்பும் மேலிட கிளியைப் பார்த்தான் தேவேந்திரன். கிளி மேலும் தொடர்ந்து ''தேவலோக அரசரே! தாங்கள் ஆச்சரியப்பட தேவையில்லை. என்னுடைய தவ வலிமையால் நீங்கள் தான் தேவேந்திரன் என்பதைத் தெரிந்து கொண்டேன்'', என்று சொன்னது.

தேவேந்திரன் சுய உருவுக்கு மாறினான். பின்னர் கிளியைப்பார்த்து ''கிளியே இந்த மரம் பட்டுப்போய் காய்கனிகள் எதுவும் இனி வளர வழியில்லாமல் ஆகிவிட் டது. இனியும் எதற்காக இந்த மரத்திலேயே இருந்து கொண்டிருக்கிறாய்? இங்கு இருந்த மற்ற பறவைகள் எல்லாம், வேறு நல்ல மரங்களைத் தேடிப் பறந்து விட்டன.

நீயும் அதே போல உண்ணக் காய்கனிகள் உள்ள வேறு ஏதாவது மரத்திற்குச் சென்று விடவேண்டியதுதானே?'' என்று கேட்டான். கிளி தேவேந்திரனுக்கு பதில் சொல்லத் தொடங்கியது.

''தேவேந்திரா! என் நற்குணங்கள் தான் எனக்கு உங்களையே அடையாளம் காட்டியது. அப்படியிருக்கும்போது தீய வழியில் நான் ஏன் செல்ல வேண்டும்? நான் பிறந்த தில் இருந்து இன்று வரை, இந்த மரம்தான் நான் உண்பதற்கான காய்கனிகளும் இருக்க இடமும் கொடுத்துக் காப்பாற்றி வந்தது. இப்படிப்பட்ட மரத்தை விட்டு நான் எப்படிச் செல்வது? நன்றி மறத்தல் என்பது எப்பேர்ப்பட்ட தீய குணம் எந்தத் தவறைச் செய்தாலும் அதற்குப் பரிகாரம் உண்டு. ஆனால் நன்றி மறந்தால், அந்தத் தவறுக்குப் பரிகாரமே கிடையாதே! இது உங்களுக்குத் தெரியாதா? நீங்கள் என்னிடம் இப்படிக் கேட்கலாமா?'' என்று அந்தக் கிளி கூறியது.

கிளியின் பதிலைக் கேட்டு பெரும் மகிழ்ச்சியடைந்தான் இந்திரன். அதனிடம் ''உன் நல்ல குணத்தை எண்ணி மகிழ்வுறுகிறேன். உனக்கு ஏதாவது வரம் தர என் மனம் எண்ணுகிறது. என்ன வரம் வேண்டுமோ கேள் என்றான்.

''தேவர்குல வேந்தே எனக்கு நீங்கள் வரம் தருவதாக இருந்தால் பட்டுப்போன இந்த மரம் பழையபடி பூத்துக்குலுங்கும் வளமான மரமாக மாற வேண்டும். அதுவே எனது விருப்பமும் வரமும் ஆகும்'' என்று சொல்லியது.

அதைக்கேட்ட தேவேந்திரன் உடனடியாக அங்கிருந்து மறைந்தான். (தன்னால் இயலாது என்று வரம் கொடுக்காமல் தப்பிக்க அல்ல தெய்வ சக்தியால் முடியாதது என்று எதுதான் இவ்வுலகில் இருக்கிறது. பிறகு எதற்காக தேவேந்திரன் மறைந்தான் என்கிறீர்களா? வரம் கொடுக்க வேண்டுமே அதற்காகத்தான்.) மறைந்தவன் அமிர்த கலசத்துடன் மரத்தின் முன்பாகத் தோன்றினான். பட்டுப்போன மரத்தின் மேல் அமிர்த கலசத்தில் இருந்து சில துளிகளை எடுத்துத் தெளித்தான். மறுகணமே மரம் பழையபடியே பூத்துக்குலுங்கியது. அந்த மரத்திலேயே தங்கியிருந்த கிளியானது, பல ஆண்டு காலம் மகிழ்ச்சியாக வாழ்ந்தது. அதன் ஆயுட்காலம் முடிந்ததும் கிளி இந்திரலோகத்தை அடைந்தது.

ஓரறிவு உள்ள மரத்திடம் ஐந்தறிவுள்ள கிளி நன்றி மறவாமல் அன்புடன்

இருக்கும்போது ஆறறிவுள்ள மனிதர்களாகிய நாம் எப்படி இருக்க வேண்டும் என்று அழகாக விளக்குகிறதல்லவா? இந்தக் கதை!

## பயிற்சிகள்

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. இந்தக் கதை யாரால் கூறப்பட்டது?
2. இந்தக் கதையில் வரும் கதாபாத்திரங்கள் எவை?
3. தேவர்களின் அரசன் யார்?
4. கிளி இந்திரனிடம் கேட்ட வரம் என்ன?
5. கிளியிடம் உமக்கு பிடித்த பண்புகளை எழுதுக.

## செயற்பாடு

1. இந்தக்கதையினை நாடகமாக ஆக்கி, வகுப்பறையில் நடித்துக் காட்டுங்கள்.

## பாடச்சுருக்கம்

- வியாசர் கூறிய கதையில் இருந்து நன்றி மறவாமையின் முக்கியத்துவத்தை அறிய முடிகின்றது.
- நன்றி மறவாமல் இருத்தலின் முக்கியத்துவம் வலியுறுத் தப்படுகின்றது.
- மனிதர்களாகிய நாமும் நன்றியுடையவர்களாக வாழ்வோம்.

## (ஈ) தருமம்



எல்லா மதங்களும் ஒற்றுமையுடன் ஒரே குரலில் அழுத்திச் சொல்லும் சில விடயங்களில் முக்கியம் வகிப்பது தருமம் செய்யுங்கள் என்கிற அறிவு ஆகும். அறம் செய விரும்பு என்று ஔவையாரே ஆத்திசூடியை தருமத்திலிருந்து தான் ஆரம்பிக்கிறார்.

தருமம் குறித்து மகாபாரதத்தில் மிக அருமையான கதைஒன்று இருக்கிறது. கௌரவர்களை குருஷேத்திரப் போரில் வென்ற பின் தருமபுத்திரர் அஸ்வமேத யாகம் செய்து முடிவில் எட்டுத் திக்கிலிருந்தும் வந்திருந்த ஏழை எளியவர்களுக்கு தானங்கள் செய்தார். அந்த நேரத்தில் பாதி உடல் தங்கம் போல் மின்னிய கீரி ஒன்று யாகசாலைக்குள் வந்து தானம் நடைபெற்ற இடத்தில் தரையில் புரண்டு புரண்டு எழுந்தது. எதற்காகப் புரள்கிறாய்?'' என்று கீரியைக் கேட்டார்கள். ''மிகப் பெருந்தானம் நடக்கும் இடத்தில் புரண்டால், மீதி உடலும் தங்கமாகும் என்று நம்பி வந்தேன். இந்த இடத்தில் தானம் நடக்கவில்லை போலும். அதனால் தான் என் மீதி உடல் தங்கமாகவில்லை'' என்றது கீரி.

எல்லோரும் திருப்தி அடையும் அளவு தானம் செய்திருந்த தர்மபுத்திரர் அதைக்கேட்டு ஆச்சரியம் அடைந்தார். அங்கிருந்தவர்கள் ''இது என்ன விந்தை? இதை விடப் பெரிய அளவில் யாராவது தானம் செய்ய முடியுமா என்ன? அப்படி எந்த இடத்தில் உன் பாதி உடல் தங்கமானது?'' என்று கீரியை விசாரித்தார்கள்.

கீரி பதில் சொன்னது ஒரு உஞ்சவிருத்தி பிராமணரின் குடும்பத்தில் அவர், அவர் மனைவி, மகன் , மருமகள் என நான்கு பேர் இருந்தார்கள். ஒரு சமயத்தில் கடும் பஞ்சம் வந்து அவர்கள் பல நாள் பட்டினி கிடக்க நேரிட்டது.

ஒருநாள் ஒருபடி சோளம் கிடைக்க அந்த சோளத்தை மாவாக அரைத்து அதை நான்காகப் பிரித்து இறைவனை வணங்கி சாப்பிட அமர்ந்தார்கள். அந்த நேரத்தில் கடும்பசியோடு ஒருவர் அந்த வீட்டுக்கு வரவே, அவரை வரவேற்று உபசரித்த குடும்பத் தலைவர், தன் பங்கு மாவை அவருக்குச் சாப்பிடக் கொடுத்தார். அது வந்தவருக்குப் போதாமல் போகவே அடுத்ததாக மனைவி, பின் மகன், அதன் பின் மருமகள் என மற்றவர்களும் தங்கள் பங்கு மாவை பசியோடு வந்தவருக்கு முழுமையாகக் கொடுத்து விட்டனர். அப்படி தர்மம் நடந்த அந்த வீட்டில் பரிமாறும் போது சிதறிய மாவின் மீது நான் போகும்போது என்பாதி உடல் தங்கமாகியது. மீதி உடலையும் தங்கமாக்கிக் கொள்ளும் ஆசையில் இங்கு வந்தேன். ஆனால் உங்கள் தர்மம் அந்த ஒரு மாவுக்குச் சமமாக இருக்கவில்லை என்று கீரி கூறியது.

மிக உயர்ந்த வகையான ஈடில்லா தருமம் அது என்பதில் சந்தேகமே இல்லை. ஆனால் அந்த வகையான தருமத்தை எல்லோராலும் செய்வது முடியாத நிலையில் அடுத்தவர்க்கு முடிந்த வரையில் தருமம் செய்ய வேண்டியது சைவ சமயிகளின் கடமையாகும்.

## பயிற்சிகள்

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. மதங்கள் பிரதானமாக வலியுறுத்தும் விடயம் யாது?
2. அறம் செய விரும்பு என்று கூறியவர் யார்? இவ்வடி இடம் பெற்றுள்ள நூலின் பெயர் யாது?
3. தர்மபுத்திரன் செய்த யாகத்தின் பெயர் எது?
4. கீரியின் உடம்பில் நிகழ்ந்த மாற்றம் என்ன?
5. கீரி கூறிய விடயத்தை சுருக்கமான கதையாக எழுதுக.

## செயற்பாடு

1. உங்கள் பாடசாலையில் இடம் பெறும் சமயவிழாக்களின் போது முடிந்தளவு தருமங்களை செய்யுங்கள்.

## பாடச்சுருக்கம்

- ❑ எல்லா மதங்களும் வலியுறுத்திச் சொல்லும் விடயம் தருமமாகும்.
- ❑ நாம் எங்களுக்கு முடிந்த வகையில் தருமம் செய்தல் வேண்டும்.
- ❑ தருமத்தின் பெருமைதனை பிறருக்கும் போதிக்க வேண்டும்.

# 5 வாழ்வியல் சடங்குகள்

சைவ சமயத்தவர்களின் வாழ்வுடன் தொடர்புபடும் சடங்குகள் வாழ்வியல் சடங்குகளாகும். இச்சடங்குகள் மனித வாழ்க்கையை அர்த்தத்துடனும் நெறிமுறை தவறாதும் வாழ வேண்டும் என்ற கருத்தில் மனித வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் மேற்கொள்ளப்படுகிறது. இச் சடங்குகள் யாவும் சமய குருவின் துணையுடன் இயற்றப்படும் சடங்குகளாகக் காணப்படுகின்றன. இச்சடங்குகள் மங்கல கருமங்கள், அமங்கல கருமங்கள் என இருவகைப்படும்.

மங்கல கருமங்கள் சுபகருமங்களென அழைக்கப்படும். பிறந்த குழந்தைக்குப் பெயர் சூட்டுதல், காதுகுத்துதல், சோறூட்டல், ஏடு தொடக்குதல் என்பன சுப கருமங்களுட் சிலவாகும். சைவர்களாகிய நாம் அவை பற்றி அறிந்திருத்தல் அவசிய மானதாகும்.

## அ. பெயர் சூட்டுதல்

குழந்தை பிறந்து 31ஆம் நாள் துடக்குக் கழித்த பின் குழந்தைக்கு பெயர் சூட்டும் சடங்கு இடம்பெறும். இது நாமகரணம் எனவும் அழைக்கப்படும். பெயர் சூட்டல் சடங்கானது ஒரு நல்ல நாளில் பெரியோர்கள் முன்னிலையில் இடம்பெறும். முதலில் இறைவனுக்கு வழிபாடு நடத்தப்படும். அதனை அடுத்து தாய்மாமன் அல்லது ஒரு பெரியவர் மடியில் குழந்தையை வைத்து தெரிந்தெடுத்த பெயரை குழந்தையின் வலது காதில் மூன்று முறை கூற தொடர்ந்து சூழ்ந்திருக்கும் பெரியோர்களும் குழந்தையின் பெயரை ஏற்றுச் சொல்ல வேண்டும்.



பெயர் மந்திரம் போன்றது. அதனைத் திரும்பத் திரும்ப சொல்லி அழைக்கும் போதும் அப்பிள்ளை பெயர் தரும் பொருளுக்கு ஏற்றவனாக வாழ்வான். ஆதலால் பிள்ளைகளுக்கு உயர்ந்த உத்தமமான பெயரையே வைத்தல் வேண்டும். எமது சமயத்தில் குழந்தைகளுக்குப் பெயர் சூட்டி ஆசீர்வதித்தல் ஒரு சடங்காகும். நாம் அவற்றிற்கு மதிப்பளித்து நடக்க வேண்டும்.

## (ஆ) காது குத்தல்

குழந்தை பிறந்த ஆறாம், ஏழாம், எட்டாம் மாதங்களில் ஒன்றில் சுபவேளையில் காது குத்துதல் இடம் பெறும். இது கர்ண வேதனம் எனவும் அழைக்கப்படும். பிள்ளைக்கு ஏற்படக் கூடிய சில நோய்களின் நிவர்த்திக்காகவும், தமிழ்ப் பண்பாட்டைப் பேணு வதற்காகவும், அழகுக்காகவுமே காதுகுத்தல் சடங்கு நடாத்தப் படுகின்றது. தைப்பூச நாள் காது குத்துவதற்குச் சிறப்பான நாளாகும்.



## (இ) சோறூட்டல்

குழந்தை பிறந்த ஆறாவது மாதத்தில் வரும் சுப முகூர்த்தத்தில் சோறூட்டும் சடங்கு நடைபெறும். இச்சடங்கினை அன்னப் பிராசனம் எனவும் அழைப்பர்.

சோறூட்டல் சடங்கு ஆலயம், வீடு முதலான இடங்களில் நடை பெறும். அரிசி, சர்க்கரை, கற்கண்டு, நெய் ஆகியவை கொண்டு அமுது பொங்கி இறைவனுக்குப் படைத்து பூசையில் வைத்த பிரசாதத்தை தந்தை அல்லது தாய்மாமன் குழந்தைக்கு மூன்று முறை ஊட்ட வேண்டும். பின் தாயும் மற்றும் உறவினர்களும் ஊட்டி விடுவர். குழந்தை எக்காலத்தும் உணவுக்



குக் குறைவில்லாமலும் சுகதேகியாக வாழவும் இறைவனை வேண்டிப் பிரார்த்தித்தல் சோறூட்டல் சடங்கின் முக்கிய நோக்கமாகும்.

## (ஈ) ஏடு தொடக்குதல்



கல்வியைத் தொடக்குதல் என்பது இதன் பொருளாகும். ஏடு தொடங்கல் நிகழ்வு 'வித்தியாரம்பம்', 'அட்சர அப்பியாச ஆரம்பம்' என்ற பெயர்களாலும் அழைக்கப்படும். முற்காலத்தில் ஓலையிலான ஏட்டில் எழுதியே கல்வியை முன்னோர் கற்றார்கள். அதனால் முதலில் கல் வியை ஆரம்பிக்கும் போது ஏடு தொடங்குதல் என்று சொல்வது வழக்கமாகி விட்டது. இந் நிகழ்வானது குழந்தைக்கு அறிவை ஊட்டும் சுப கருமமாக விளங்குகின்றது.

மூன்று அல்லது ஐந்து யதானதும் விஜயதசமியன்று அல்லது தைப்பூசத்தன்று குழந்தைக்கு ஏடு தொடக்கலாம். கோயிலில் அல்லது வீட்டில் கும்பம் வைத்து, பூசை வழிபாடுகள் செய்து கல்வியில் சிறந்த ஆசானின் ஆசியுடன் ஏடு தொடக்குதலை மேற்கொள்ளலாம்.

ஏடு தொடக்குதலை ஆரம்பிக்கும்போது, குருவானவர் வேட்டி அணிந்து, விபூதி தரித்து, தலைப்பாகை கட்டிக் கொண்டு குழந்தையை மடியில் இருத்தி, ஏட்டைப் பிள்ளையின் கையிற் கொடுத்து, அகர முதலான எழுத்துக்களை சொல்லிக் கொடுத்தல் வேண்டும். பின் தட்டத்தில் பரவப்பட்டுள்ள பச்சையரிசியில் பிள்ளையின் விரலைப் பிடித்து எழுதுவித்தலும் எமது சமய மரபாகக் காணப்படுகின்றது.

கல்வியில் மேன்மையும், உண்மைப் பயனும் அடைய வேண்டும் என்பதற்காகவே சுபநாளில் ஏடு தொடக்குவது வித்தியாரம்பம் செய்வது வழமை.

## பயிற்சிகள்

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. வாழ்வியல் சடங்குகளை மேற்கொள்வதன் நோக்கம் யாது?
2. வாழ்வியல் சடங்குகள் மூன்றின் பெயர்களை எழுதுக.
3. காது குத்தும் சடங்கினை வேறு எவ்வாறு அழைக்கலாம்?
4. சோறூட்டும் சடங்கின் முக்கிய நோக்கம் யாது?

## செயற்பாடு

1. நீர் அறிந்த வேறு மங்கல சடங்குகள் தொடர்பான தகவல்களைத் தேடியறிந்து வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

## பாடச்சுருக்கம்

- சைவ சமயத்தவர்களின் வாழ்வுடன் தொடர்புடைய சடங்குகள் வாழ்வியல் சடங்குகளாகும்.
- வாழ்வியல் சடங்குகள், மங்கல சடங்குகள், அமங்கல சடங்குகள் என இருவகைப்படும்.
- குழந்தைக்கு பெயர் சூட்டுதல், காது குத்தல், சோறூட்டல், ஏடு தொடக்குதல் என்பன சுப கருமங்களாகும்.

# 6 விரதங்களும் பண்டிகைகளும்

சைவ மக்களாகிய எம்மால் பின்பற்றப்படுகின்ற விரதங்களும், பண்டிகை களும் எமது வாழ்வில் இறையுணர்வையும், புனிதத் தன்மையையும் ஏற்படுத்துகின்றன. சைவ சமயப் பாரம்பரியங்களைப் பேணி வாழ்வில் கடைப்பிடிப்பதற்கு அவை பற்றி நாம் அறிந்திருத்தல் அவசியமாகும். எனவே நாம் விரதங்கள், பண்டிகைகள் பற்றிக் கற்று, அவற்றை முறையாகக் கடைப்பிடித்து ஒழுகுவதன் மூலம் இறையருளைப் பெறுவோம்.

## விரதங்கள்



''விரதமானது மனம் பொறிவழிப் போகாது நிற்றற் பொருட்டு, உணவை விடுத்தேனும், சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை மெய்யன்போடு விசேடமாக வழிபடல்'' என நாவலர் பெருமான் குறிப்பிடுகின்றார். சைவ மக்கள் அனுட்டிக்கும் விரதங்களுள் கடவுளுக்குரிய விரதங்களை சிவ விரதங்கள், விநாயக விரதங்கள், கந்த விரதங்கள், சக்தி விரதங்கள், விஷ்ணுவுக்குரிய விரதங்கள்

என வகைப்படுத்தலாம். சிவராத்திரி, திருவாதிரை, பிரதோஷம், கேதார கௌரி விரதம் முதலியன சிவனுக்குரிய விரதங்கள் ஆகும். விநாயக சதுர்த்தி, விநாயகசஷ்டி என்பன விநாயக விரதங்கள் ஆகும். திருக்கார்த்திகை, கந்தசஷ்டி, வெள்ளிக்கிழமை விரதம் முதலியன முருகனுக்குரிய விரதங்களாகும். நவராத்திரி, சுக்கிரவார விரதம் என்பன சக்திக்குரிய விரதங்களாகும். ஏகாதசி, மஹாநவமி என்பன விஷ்ணுவுக்குரிய விரதங்களாகும்.

பொதுவாக விரதங்களை அனுட்டிக்கும் போது பின்பற்ற வேண்டிய நியதிகள் பல காணப்படுகின்றன. அவற்றுள் அதிகாலையில் நித்திரை விட்டெழுதல், புறத்தூய்மை, அகத்தூய்மை பேணுதல், தோய்த்து உலர்ந்த ஆடை அணிதல், ஆலயத் திற்குச் சென்று பக்தியுடன் இறைவனை வழிபடுதல், திருமுறை ஓதுதல், உணவைச் சுருக்குதல், என்பன சகல விரதங்களுக்கும் பொதுவானவை ஆகும்.

விரதம் அனுட்டிப்பவர் விரத காலங்களில் தாம்பூலந்தரித்தல், புகை பிடித்தல், பகலில் நித்திரை செய்தல், பொய் பேசுதல், பிறர் பொருளை அபகரித்தல் முதலியன செய்தல் கூடாது.

விரதங்கள் கடவுள் மீது பக்தியை ஏற்படுத்துகின்றன. பொறுமை, புலக் கட்டுப்பாடு, மனவலிமை உடையவர்களாகவும், ஒழுக்க சீலர்களாகவும் எம்மை மாற்றுகின்றன. எனவே நாம் விரதங்களை முறையாக அனுட்டித்து இறையருளையும், நற்பயன்களையும் பெற்றுக் கொள்வோமாக.



சைவ மக்களின் வாழ்வில் மகிழ்ச்சியையும், மன நிறைவையும் இறை பக்தியையும் வளர்ப்பனவாக பண்டிகைகள் அமைந்துள்ளன. பண்டிகை என்ற சொல் பெருநாள், விஷேடநாள் என்னும் பொருளைத் தரும். பண்டிகை என்பது சமயம் சார்ந்தது மட்டுமன்றி வாழ்வியல் சார்ந்த கொண்டாட்டமாகும். இது வருடந்தோறும் குறிப்பிட்ட நாளில் விருந்துடன் கொண்டாடப்படும். அதாவது பலவகை உணவுகளைச் சிறுவர்கள், பெரியோர்கள், அயலவர்கள் நண்பர்கள் கூடியுண்ணும் விருந்து வைபவமாகப் பண்டிகை விளங்குகின்றது. மேலும் உறவினர் வீட்டுக்கு விஜயம் செய்தல், புத்தாடை அணிதல், கலை நிகழ்ச்சி நடாத்துதல், வாழ்த்து மடல்களை அனுப்புதல் போன்ற குதூகலச் செயற்பாடுகள் பண்டிகைகளின் போது இடம்பெறுகின்றன.

தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு, தீபாவளி என்பன சைவ சமயத்தவர்களால் கொண்டாடப்படும் பிரதான பண்டிகைகளாகும். தைமாதப் பிறப்பன்று சூரியனுக்குப் பொங்கல் படைத்து வழிபடும் விழா பொங்கல் பண்டிகையாகும். உணவுற்பத்திக்கும் உயிர்களின் வளர்ச்சிக்கும் வேண்டிய சக்தியைச் சூரியன் வழங்குகிறான். அதனால் சூரிய பகவானுக்கு நன்றி செலுத்துமுகமாக பொங்கிப் படைத்து வழிபடுவது வழக்கம்.

சித்திரை வருடப்பிறப்புப் பண்டிகை சித்திரை மாதப் பிறப்பன்று கொண்டா டப்படுவது. அன்றைய தினத்தில் மருத்து நீர் வைத்து மங்கள நீராடிப் புத்தாடை அணிந்து கோவிலுக்குச்சென்று இறைவனை வழிபடு கின்றோம். அதன் பின்னர் சுபநேரம் பார்த்து கைவிஷேசம் கொடுத்து வாங்குவதும், உறவினர்களுடன் உறவாடுவதும் நற்காரியங்களைத் தொடங்குவதும் புதுவருடப் பண்டிகைகளில் இடம்பெறும் ஏனைய அம்சங்களாகும்.

ஐப்பசி மாதத்தில் வரும் கிருஷ்ண பட்சத்துச் சதுர்த்தசி தினத்தில் தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படுகிறது. தீபங்களை வரிசையாக ஏற்றி வைத்துக் கொண்டாடப்படுவதால் இப்பண்டிகை தீபாவளி எனப்பட்டது. நரகாசுரன் என்ற அசுரனை கிருஷ்ணபகவான் அழித்த தினமே தீபாவளி எனவும் கருதப்படுகின்றது. இத்தினத்தில் வீடுகளில் அறுசுவை உணவு தயாரித்து உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் விருந்தளிப்பர்.

எனவே சைவர்களாகிய நாம் கொண்டாடும் பண்டிகைகளின் மூலம் ஒற்றுமை உணர்வையும் பகிர்ந்துண்ணும் பண்பையும் வளர்த்துக் கொள்வோமாக.

## பயிற்சிகள்

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. விரதம் என்றால் என்ன?
2. சிவ விரதங்கள் மூன்றினைக் குறிப்பிடுக.
3. விரதங்களை அனுட்டிக்கும் போது, கடைப்பிடிக்க வேண்டிய பொதுவான நியதிகள் சில தருக.
4. பண்டிகை என்றால் என்ன?
5. நாம் கொண்டாடும் பண்டிகைகள் மூன்றின் பெயரை எழுதுக.
6. தீபாவளிப் பண்டிகை எப்போது கொண்டாடப்படுகிறது?

## செயற்பாடு

1. விரதங்கள் அல்லது பண்டிகைகள் என்ற தலைப்பில் வகுப்ப றையில் உரை நிகழ்த்துக.

## பாடச்சுருக்கம்

- விரதங்களும், பண்டிகைகளும் எமது வாழ்வில் இறை உணர்வையும், புனிதத்தன்மையையும் ஏற்படுத்துகின்றன.
- கடவுளுக்குரிய விரதங்களை சிவ விரதங்கள், விநாயக விரதங்கள், கந்த விரதங்கள், சக்தி விரதங்கள், விஷ்ணுவுக்குரிய விரதங்கள் என வகைப்படுத்தலாம்.
- விரதங்கள் கடவுள் மீது பக்தியை உண்டாக்கவல்லன. பொறுமை, புலக்கட் டுப்பாடு, மன வலிமை உடையவர்களாகவும் ஒழுக்க சீலர்களாகவும் எம்மை மாற்று கின்றன.
- பண்டிகை என்பது சமயம் சார்ந்ததும், வாழ்வியல் சார்ந்ததுமான கொண்டாட்டம் வருடந்தோறும் குறிப்பிட்ட நாளில் விருந்துடன் கொண்டாடப்படும்.
- தைப்பொங்கல், சித்திரை வருடப் பிறப்பு, தீபாவளி என்பன சைவர்களால் சிறப்பாகக் கொண்டாடப்படும் பண்டிகைகளாகும்.

# 7 திருமுறைத் தொகுப்பு



திருநாரையூரில் ஆதிசைவ அந்தணர் மரபில் நம்பியாண்டார் நம்பி அவதரித்தார். நம்பியின் தந்தையார் திருநாரையூர்ப் பொள்ளாப் பிள்ளையாருக்குப் பூசை செய்து வந்தார். ஒரு நாள் நம்பியின் தந்தை வெளியூர் சென்றமையால் பூசை செய்யும் பொறுப்பை நம்பியிடம் விட்டுச் சென்றார். நம்பி தாயார் கொடுத்த நிவேதனப்பொருட்களை எடுத்துச் சென்று பிள்ளையாருக்குப் படைத்து பூசை செய்து அதனைத் திருவமுது செய்யுமாறு வேண்டினார். பிள்ளையார் திருவமுது செய்யாதிருப்பதைக் கண்டு நம்பியும் மிகவும் மனம் வருந்தி பிள்ளையார் முன் நின்று ''சுவாமி அடியேன் ஏதும் பிழை செய்தேனோ! அடியேன் படைத்த அமுதைத் திருவமுது செய்யாதது ஏன்?'' என்றார். நைவேத்தியம் அப்படியே இருந்தது. நம்பி மிகவும் மனம் வருந்திக் கல்லில் தன் தலையினை மோத முயன்றார். அப்பொழுது பொள்ளாப்பிள்ளையார், ''நம்பி! பொறு!பொறு!''எனத்தடுத்து நைவேத்தியத்தை உவந்து திருவமுது செய்தருளினார். இதனால் நம்பி பெரும் மகிழ்ச்சி அடைந்தார்.

இவ்வாறு சில தினங்கள் நிகழ்ந்து வந்தன. இச்செய்தியை யாவரும் அறிந்து வியப்படைந்தனர். இந்த அற்புத நிகழ்வானது திருநாரையூரைச் சுற்றியுள்ள ஊர்களுக்கெல்லாம் பரவி, பின்னர் தஞ்சைப்பகுதிக்கும் எட்டியது. அப்போது தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்து வந்த மன்னன் முதலாம் இராஜராஜசோழன் ஆவான். இவன் சைவசமயத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவன். அவனுக்குத் தேவாரப்பாடல்கள் முழுவதையும் கேட்டு மகிழ ஆசை. இவ்வேளையில் திருநாரையூரில் நம்பி படைத்த உணவை பொள்ளாப்பிள்ளையார் தினமும் உண்டு வருகின்றார் என்ற செய்தியைக் கேட்ட சோழ மன்னன் தனது ஆசையை எப்படியாவது நிறைவேற்ற வேண்டும் என எண்ணி, தன் பரிவாரங்கள் சூழ, மோதகம், அப்பம், வடை, கடலை, பழ வகைகள், தேன் என்பவற்றை யானை மீது ஏற்றிக்கொண்டு திருநாரையூர் வந்தடைந்தார்.

வந்தடைந்த அரசன், நம்பியின் பாதங்களை வணங்கிப் பொள்ளாப் பிள்ளையாருக்கு நிவேதிக்கும்படி கொண்டு வந்த பொருட்களை அவன் நம்பியின் கையில் கொடுத்தான். நம்பியும் பிள்ளையார் திருவடியை வணங்கி, நைவேத்தியத்தைப் படைத்து, ''எம்பெருமானே! அரசர் நிவேதித்த இப்பொருட்களை திருவமுது செய்தருளுக'' என்று பிரார்த்தித்தார். ஆனைமுகக் கடவுளும் அவற்றைத் தமது துதிக்கையினால் ஏற்றுத் திருவமுது செய்தருளினார். இதைக் கண்டு மனம் மகிழ்ந்த மன்னன் நம்பியின் பாதங்களில் விழுந்து வணங்கி, நம்பியை நோக்கி, ''மறையவரே! மூவர் தமிழும், அவர் சிறப்பும் உலகில் விளங்கச் செய்தருளுக.'' என்று விண்ணப்பித்தான்.

நம்பியும் பிள்ளையாரின் திருவடிகளைத் தியானித்து வணங்கி, அரசனின் விருப்பத்தை நிறைவேற்றித்தருமாறு வேண்டி நின்றார். அப்போதுபிள்ளையார், ''நம்பி! தேவாரத் திருமுறைகள் சிதம்பரத்தில் ஓர் அறையில் உள்ளன.'' என்று திருவாய் மலர்ந்தருளினார். அதனை நம்பி சோழமன்னனுக்குக் கூறினார்.

அதன்படி நம்பி தஞ்சை மன்னனை அழைத்துக் கொண்டு தில்லைக்குச் சென்றார். தில்லையில் பிள்ளையார் உணர்த்தியவாறு திருக்காப்பிடப்பட்டிருந்த அறையைத் திறக்கும்படி தில்லைவாழ் அந்தணர்களை மன்னன் கேட்டுக்கொண்டான். ''இந்த அறையில் தான் மூவர் பாடிய தேவாரப்பதிகங்கள் உள்ளன. ஆனால் அம்மூவரும் வந்தால் தான் அறை திறக்கப்படும்'' என்று அந்தணர் கூறினர். உடனே மன்னன் மூவர்

முதலிகளைப்போலச் செப்புதிருமேனிகளைச் செய்வித்து அவைகளைத் தனித்தனியே பல்லக்கில் ஏற்றி, இதோ மூவரும் வந்துவிட்டனர். திருமுறைகள் இருக்கின்ற அறைக் கதவினைத் திறமின்'' எனத் தில்லைவாழ் அந்தணரைக் கேட்டுக் கொண்டான். அவர்களும் அறைக்கதவினைத் திறந்தனர். அவ்வறையில் தேவாரப்பதிகங்கள் எழுதிய ஓலைச் சுவடிகளில் பலவற்றைக் கறையான் அரித்திருப்பதைக் கண்ட நம்பி மனம் வருந்தினார். அப்போது ''இக்காலத்திற்கு வேண்டாதவையே அழித்துள்ளன. எனவே கவலையொழிக! '' எனும் ஓர் அசரீரீ ஒலித்தது. இதனால் மகிழ்ச்சியடைந்த நம்பி பழுது படாதிருந்த ஏடுகளைத் திரட்டி இராஜராஜசோழ மன்னனின் வேண்டுதலுக்கிணங்க திருமுறைகளாகத் தொகுத்தார்.

திருஞானசம்பந்தருடைய பாடல்களை முதல் மூன்று திரு முறைகளாகவும், திருநாவுக்கரசரது பாடல்களை நான்காம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகளாகவும், சுந்தரமூர்த்தி நாயனாருடைய பாடல்களை ஏழாந்திரு முறையாகவும் தொகுத்தார்.

மாணிக்கவாசக சுவாமிகள் பாடிய திருவாசகம், திருக்கோவையார் எட்டாந் திருமுறையாகவும், திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்பது பேர் பாடிய திருவிசைப்பா மற்றும் சேந்தனார் பாடிய திருப்பல்லாண்டு, ஒன்பதாம் திருமுறையாகவும், திருமூல நாயனாரால் பாடி அருளப் பெற்ற திருமந்திரம் பத்தாம் திருமுறையாகவும், பன்னிருவர் பாடிய பிரபந்தங்கள் பதினொராம் திருமுறையாகவும் நம்பியாண்டார் நம்பியால் தொகுக்கப்பட்டன. பன்னிரெண்டாம் திருமுறையாக சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணம் இடம்பெறுகிறது.

## பயிற்சிகள்

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. நம்பி அவதரித்த ஊரின் பெயர் என்ன?
2. நம்பி மனம் வருந்தி தமது தலையினைக் கல்லிலே மோதச் சென்றமைக்கான காரணம் யாது?
3. தேவாரப்பாடல்கள் எந்த ஆலயத்தில் இருந்தன?

## செயற்பாடு

1. பன்னிருதிருமுறைகளை அட்டவணைப்படுத்துக.

## பாடச்சுருக்கம்

- நம்பியாண்டார் நம்பி திருநாரையூரில் அவதரித்தார்.
- நம்பியின் பக்தி சிறப்பானது.
- தேவாரப்பாடல்கள் சிதம்பரத்தில் ஓர் அறையில் கண்டெடுக்கப்பட்டன.

# 8 இளையான் குடிமாறநாயனார்



தமிழ் நாட்டின் ஒரு பகுதியாகிய சிறந்த வளமுடைய பாண்டிய நாட்டிலே இளையான்குடி என்ற ஓர் ஊர் உண்டு. அங்கே ''மாறனார்'' எனும் பெயருடைய சிவனடியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். இவர் வேளாண்மை செய்து அதன்மூலம் அளப்பரிய செல்வத்தைப்பெற்று, சிவனடியார்களுக்குத் திருவமுது படைப்பதைப் பெருந்தொண்டாக மேற்கொண்டு வந்தார்.

சிவனடியார் எத்தனை பேரானாலும் தம் இல்லத்திற்கு வந்தவர்களை முகம் மலர்ந்து, கைகள் குவித்து, இனிய சொற்களைக் கூறி வரவேற்று ஆசனத்தில் இருத்தி வழிபட்டுத்திருவமுது செய்வித்து அனுப்புவது வழக்கம். இவ்வாறு சிவனடியார் உள்ளம் மகிழும் வகையில் நாள்தோறும் அவர்களுக்கு அமுது படைத்தமையால் மாறனாருக்கு செல்வமும் பெருகிற்று. அளகாபுரிக்குத் தலைவனான குபேரன் போல் மாறனாரும் இளையான் குடியில் செல்வச் சிறப்புடன் கற்பிற் சிறந்த தம் மனைவியோடு இல்லறத்தை இனிது நடாத்தி வந்தார்.

உலகம் போற்றும் இப்பணியை வழுவாது செய்துவரும் தம் அன்பனாகிய மாறனார்,செல்வம் தேய்ந்து வறுமை நிலை வந்தாலும் அடியார்க்கு அமுதுபடைக்கும் தொண்டை இறுதிவரை செய்யும் மன உறுதி உடையவர் என்பதை உலகுக்குக் காட்ட திருவுளங்கொண்ட சிவபெருமான், மாறனாரிடம் உள்ள செல்வத்தைப் படிப்படியாகக் குறையச்செய்தார். வறுமை நிலையும் வந்தடைந்தது. செல்வ வளம் சுருங்கியபோதும் மாறனார் மனம் சுருங்காமல் தமது பொருள் பண்டங்களை விற்றும், கடன் பெற்றும் அடியார்க்கு அமுதூட்டுவதை விடாது செய்து வந்தார். இதனால் மாறனாரும் அவர் மனைவியும் பலநாள் உணவின்றி இருந்தனர்.

இவ்வாறு இருக்கும் போது ஒருநாள் நள்ளிரவில் சிவபெருமான் அடியார் வேடம் பூண்டு மாறனார் இல்லம் வந்தார். காலமோ மாரி காலம், மாறனார் நிலையோ பல நாள் பட்டினி. எனினும் தமது இல்லத்திற்கு வந்த சிவனடியாரை எதிர்கொண்டு வரவேற்று அவரது ஈர ஆடைகளையும் களைந்து, மேனி ஈரம் போக்கி உலர்ந்த உடை அணிவித்து அவரை ஓர் ஆசனத்தில் இருத்தினார்.

பின்பு தம் மனைவியாரிடம் சென்று, ''சிவ அன்பர் மிக பசியோடு இருக்கிறார். இவருக்கு அமுதூட்ட என் செய்வோம்'' என்று வினவினார். அதற்கு மனைவியார், ''கையிலும் பொருள் இல்லை, கடன் கொடுப்பதற்கும் யாருமில்லை, இன்று காலையில் வயலில் விதைத்த நெல்லை வாரிக்கொண்டு வந்தால் அமுதாக்கிப் படைப்பேன்.'' என்று கணவருக்குக் கூறினார்.

இதைக்கேட்ட நாயனாரும் மிகக்களிப்புடன் ஒரு கூடையைக் கையில் எடுத்துக் கொண்டு வயலை நோக்கி நடந்தார். வெள்ளத்தில் மிதந்த நெல் முளைகளைக் கையால் வாரி அள்ளி அதனைக் கூடையில் நிரப்பிக்கொண்டு மீண்டும் வந்து மனைவியிடம் கொடுத்தார். 'உணவு சமைக்க விறகு இல்லையே!'' என்று மனைவி வருந்த, நாயனார் உடனே வீட்டின் கூரையிலுள்ள தடிகளை அறுத்து விறகாகக் கொடுத்தார். பின்பு கறியமுது ஆக்குவதற்கு வீட்டின் பின்புறம் இருந்த முளைப்பயிர்களைப் பறித்துக் கொண்டு வந்த நாயனார் தம் மனைவியிடம் ''அடியார் பசி தணிக்க விரைவில் அமுது சமைக்க'' என்று கூறினார். அவர் மனைவியும் தம் கைத்திறத்தினால் கறிகள் பல சமைத்தார்.

இவ்வாறு உணவு சமைத்து ஆனதும் நாயனார் சிவனடியாரை அழைப்பதற்காக

அவர் இடத்திற்குச் சென்று ''சுவாமி அமுது செய்ய எழுந்தருள வேண்டும்'' என்று கூறியபோது வந்த அடியார் சோதி வடிவாய்த் தோன்றினார். அதைக்கண்டு மாறனாரும், மனைவியாரும் திகைத்து நிற்கும்போது இறைவன் உமையம்மையோடு இடபவாகனத்தில் காட்சி கொடுத்தார். ''அடியார்க்கு அமுதூட்டும் அரும்பணியைச் செய்த நீயும் மனைவியும் நம் சிவலோகத்தில் இன்புற்று வாழ்வீர்களாக'' என்று அருள் செய்து இறைவன் மறைந்தார்.

## பயிற்சிகள்

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. மாற நாயனார் ஆற்றிய பணி யாது?
2. மாறனார் இல்லத்தில் சிவனடியார் வேடம் பூண்டு வந்தவர் யார்?
3. சிவன் மாறனாரின் செல்வத்தைப் படிப்படியாகக் குறையச் செய்ததன் காரணம் யாது?


## செயற்பாடு

1. உமது ஊரில் உள்ள ஆலயம் ஒன்றிற்குச்சென்று அடியார்களுக்கு அமுது (செய்தல்) செய்வித்தல் நிகழ்ச்சியைப் பார்வையிட்டு, அதில் பங்குபற்றி அதன் சிறப்பை உமது ஆசிரியருக்கு எடுத்துரைக்கவும். (உமது ஆசிரியருடன் கலந்து ரையாடவும்)

## பாடச்சுருக்கம்

- மாற நாயனார் சிவனடியார்களுக்கு அமுதூட்டும் பணியைப்புரிந்து வந்தார்.
- மாறனார் வீட்டிற்கு இறைவன் சிவனடியார் போல் வேடம் பூண்டுவந்து அருள்புரிந்தார்.
- நாம் இறைவன் மீது நம்பிக்கையும், பக்தியும் கொண்டால் இறைவனின் திருவருள் நிச்சயம் கிடைக்கும்.

# 9 பஞ்சபுராணம்



திருமுறைகள் தெய்வத்தன்மை பொருந்திய அருட்பாக்கள் ஆகும். தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்பன பஞ்சபுராணத்தில் அடங்கும். பஞ்சபுராணம் ஆலயங்களிலும், வீடுகளிலும், பாடசாலைகளிலும் ஓதப்படுவதைக் காணலாம். வீட்டில் காலை, மாலை வழிபாடுகளின் போதும், பாடசாலைகளில் காலைப்பிரார்த்தனை, விழாக்கள் என்பன நடைபெறும் போதும் பஞ்சபுராணம் ஓதப்பட்டு வருகின்றது. பஞ்சபுராணத்தை ஓதியபின் திருப்புகழ் பாடும் வழக்கமும் உள்ளது. பஞ்சபுராணத்தை ஓதும் போது முதலில் ''திருச்சிற்றம்பலம்'' என்று சொல்வதும், பின்பு அவற்றை ஓதியபின் 'திருச்சிற்றம்பலம்'' என்று கூறி நிறைவு செய்வதும் சைவமரபு.

பஞ்சபுராணத்தைப் பண்ணுடனும், பக்தியுடனும் பாடுவதன் மூலம் மனநிம்மதி, இறைபக்தி, ஆன்மீக உணர்வு என்பன மேம்படுகின்றன.

## பயிற்சிகள்

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. பஞ்சபுராணத்தில் அடங்கும் நூல்கள் யாவை?
2. பஞ்சபுராணம் ஓதப்படும் சந்தர்ப்பங்கள் இரண்டு தருக.
3. ''திருச்சிற்றம்பலம்'' சொல்லும் சந்தர்ப்பங்கள் யாவை?
4. பஞ்சபுராணத்தை ஓதுவதால் நாம் அடையும் நன்மைகள் யாவை?

## செயற்பாடு

1. பஞ்சபுராணத்தை எழுந்து நின்று, கைகூப்பி, பக்தியோடும், பண்ணோடும் ஓதிக்காட்டுக.

## பாடச்சுருக்கம்

- தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்பன பஞ்சபுராணத்தில் அடங்கும்.
- பஞ்சபுராணம் ஆலயங்களிலும், வீடுகளிலும், பாடசலைகளிலும் ஓதப்படும்.
- பஞ்சபுராணம் ஓத முன்பும், ஓதிய பின்பும் 'திருச்சிற்றம்பலம்'' எனச் சொல்லவேண்டும்.

## (அ) திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் - தேவாரம்

திருஞானசம்பந்தர் திருவாவடுதுறையில் எழுந்தருளி இருந்த போது, தந்தையார் செய்யவிருந்த யாகக்கிரியைக்குப் பொன் கொடுக்க விரும்பிய சம்பந்தர் திருவாவடுதுறை ஆலயத்திற்குச் சென்று 'இடரினுந் தளரினும்' என்று தொடங்கும் இப்பதிகத்தைப் பாடினார். அப்பொழுது இறை அருளால் பொன்கிடைத்தது. அதனைத் தந்தைக்கு கொடுத்து யாகக்கிரியைக்குப் பயன்படுத்துமாறு கூறினார்.

தலம் : திருவாவடுதுறை பண் : காந்தாரபஞ்சமம்.

திருச்சிற்றம்பலம்

**இடரினுந் தளரினும் எனதுறு நோய்**
**தொடரினும் உனக்கழல் தொழுதெழுவேன்**
**கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை**
**மிடறினில் அடக்கிய வேதியனே**
**இதுவோ எமை ஆளுமாறு ஈவ தொன்று எமக் கில்லையேல்**
**அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை யரனே.**

திருச்சிற்றம்பலம்

## பொழிப்புரை

திருப்பாற்கடலில், அமுதத்தோடு நஞ்சு கலந்தபோது, அதனை உண்டு, கண்டத்தில் அடக்கிய வேதமுதல்வனே! துன்பம், தளர்ச்சி, முற்பிறப்பு வினை என எத்தனை இடுக்கண் தொடர்ந்தாலும் அடியேன் உமது திருவடிகளையே தஞ்சம் என வணங்குவேன். திருவாவடுதுறையில் வீற்றிருக்கும் இறைவனே! நான் இவ்வாறு வணங்க, நீர் எமக்கு ஈவதற்கு ஒன்றுமே இல்லை என்றால், இதுவோ நீர் அடியேனை ஆட்கொள்ளும் விதம், இதுவோ உமது திருவருள் (என்று சம்பந்தர் சிவனிடம் இறைஞ்சுகின்றார்)

## பதவிளக்கம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **இடர்** | - | துன்பம் | **கழல்** | - | திருவடி |
| **கடல்** | - | திருப்பாற்கடல் | **மிடறு** | - | கண்டம் |
| **வேதியன்** | - | வேதமுதல்வன் | | | |

## (ஆ) திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

திருநாவுக்கரசர் திருவையாற்றில் கைலைக் காட்சியைக் கண்டு மகிழ்ந்தார். அக்காட்சி மறைந்த பின் வருந்தி, பின்பு தாம் கண்ட காட்சியைத் திருப்பதிகங்களாகப் பாடினார். அவர் பாடியருளியவற்றில் ஓசை ஒலியெலாம்... எனும் திருப்பதிகமும் ஒன்றாகும். இப்பதிகமானது தாண்டகம் எனும் ஒருவகைப்பாடல் ஆகும். இதனால் திருநாவுக்கரசரை தாண்டகவேந்தர் எனும் சிறப்புப்பெயரால் போற்றுவர். இவர் அருளிய திருத்தாண்டகங்கள் ஆறாம் திருமுறையுள் அடங்கும்.

தலம் : திருவையாறு

திருச்சிற்றம்பலம்

ஓசை யொலியெலாம் ஆனாய் நீயே
உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே
வாசமலரெலாம் ஆனாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப்பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலாம் ஆனாய் நீயே
திருவையாறு அகலாத செம்பொற் சோதீ.

திருச்சிற்றம்பலம்

## பொழிப்புரை

திருவையாறு எனும் தலத்தினை விட்டகலாத செம்பொன் போலச் சுடரும் ஒளி வடிவான இறைவனே! ஓசையாகவும் அதிலிருந்து பிறக்கின்ற எல்லா ஒலிகளுமாயும் உள்ளவன் நீயே. இந்த உலகிற்கு ஒப்பற்ற தலைவனாய் உள்ளவனும் நீயே. நறுமணம் வீசும் எல்லா மலர்களாகவும் உள்ளவன் நீயே. மலையரசனுக்கு மருமகனாக வந்தவனும் நீயே. போற்றிப்புகழ்வதற்கு மிகவும் இனியவனாக இருப்பவனும் நீயே. என் தலைமேல் திருவடியை வைத்து அருள் புரிந்தவனும் நீயே. உலகை விளக்கும் சூரியன், சந்திரன், அக்கினி எனும் முச்சுடராய் உள்ளவனும் நீயே.

## பதவிளக்கம்

**ஓசை** - நாதம்

**தேசவிளக்கு** - முச்சுடர்களாகிய சூரியன் சந்திரன், அக்கினி

## (இ) சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்

சுந்தரமூர்த்திநாயனார் திருமணப்பருவத்தை அடைந்து, மணக்கோலத்தோடு கல்யாணப்பந்தலில் நிற்கும்போது சிவபெருமான் கிழப்பிராமண வடிவில் எழுந்தருளி சுந்தரரைத் தடுத்தாட் கொண்டு அருளினார். பின்பு இறைவன் திருவெண்ணெய் நல்லூரில் காட்சி கொடுத்தருளி, மறைந்தபோது, சுந்தரமூர்த்தி நாயனாரால் முதன்முதலாகப் பாடப்பெற்ற தேவாரமே ''பித்தாபிறை சூடி பெருமானே'' என்பதாகும். வேதியராக வந்த இறைவனை அறியாது பித்தன் என்று ஏசினார் சுந்தரர். அதனால் பித்தா! என்றே பாடுக, என்று பணித்தார் சிவபெருமான்.

தலம் : திருவெண்ணெய் நல்லூர்

பண் : இந்தளம்

திருச்சிற்றம்பலம்

பித்தாபிறை சூடி பெருமானே அருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர்
அருட்டுறையுள்
அத்தா உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனலாமே.

திருச்சிற்றம்பலம்

## பொழிப்புரை

*பித்தனே! பிறை அணிந்தவனே! பெருமையுடையவனே, அருளா ளனே! என் மனத்துள் எவ்வகையாலும் மறவாது உன்னை வைத்தாய், பெண்ணையாற்றுத் தென்கரையிலுள்ள திருவெண்ணெய் நல்லூரில் அருட்டுறை எனும் கோயிலில் எழுந்தருளியுள்ள தந்தையே! முன்பே உனக்கு அடிமையாகி இப்போது உமக்கு அடிமை அல்லன், எனக்கூறுவது நன்றோ.*

## பதவிளக்கம்

***அருளாளா*** - *அருளுடையவனே.*

## (ஈ) மாணிக்கவாசக சுவாமிகள் - திருவாசகம்

மாணிக்கவாசக சுவாமிகளால் பாடப்பட்ட பாடல்கள் திருவாசகம், திருக்கோவையார் என்பவையாகும். இவை எட்டாம் திருமுறையில் அடங்குகின்றன. மாணிக்கவாசக சுவாமிகள் பௌத்தர்களுடன் வாதிட்டு வென்றபோது, திருவாசகத்தில் திருச்சாழல் எனும் பகுதியில் உள்ள கீழ்வரும் பாடலைப்பாடியுள்ளார்.

தலம் : தில்லை

திருச்சிற்றம்பலம்

**பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்**
**பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடீ**
**பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை**
**ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாலேலோ.**

திருச்சிற்றம்பலம்

### பொழிப்புரை

ஏடி தோழி ! சிவபெருமான் பூசிக்கொள்வதும் வெள்ளை நிறமுள்ள விபூதியே, அணிந்து கொள்வதும் சீறுகின்ற பாம்பே. திருவாயால் பேசிக்கொள்வதும் வேதங்களையே. இவ்வாறு பூசுவதும், அணிவதும் செய்வதனால் எல்லா உயிர்களுக்கும் உள்ள வடிவையே தாமும் வடிவாகக் கொண்டுள்ளான் என்று சாழல் கொட்டி விளையாடுவோம்.

## பதவிளக்கம்

| | | |
|---|---|---|
| ***சாழல்*** | - | பெண்கள் விளையாட்டுக்களில் ஒன்று |
| **பூண்பது** | - | அணிவது |
| **பொங்கு அரவம்** | - | சீறுகின்ற பாம்பு |
| ***மறை*** | - | வேதம் |

## (உ) திருவிசைப்பா

''திருவிசைப்பா'' என்பது இறைவனின் பெருமையைப்பாடுகின்ற தெய்வத் தன்மை பொருந்திய இசைப்பாடல் எனப்பொருள்படும். சைவத் திருமுறைகளுள் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்பன ஒன்பதாந் திருமுறையில் அடங்குகின்றன. திருமாளிகைதேவர் தொடக்கம் சேதிராயர் வரையிலான ஒன்பது அடியவர்கள் அருளிய பாடல்கள் திருவிசைப்பாவில் இடம்பெறுகின்றன. 'கோயில்' என்று அழைக்கப்படும். தில்லைத்தலத்தின் மீது திருமாளிகைத்தேவர் பாடிய ''ஒளிவளர் விளக்கே'' எனும் திருவிசைப்பாவினை இங்கு கற்போம்.



தலம் - கோயில் (தில்லை)

பண் -பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக்கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்து உகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

திருச்சிற்றம்பலம்

## பொழிப்புரை

ஞான ஒளியைப் பரப்பும் தீபமே, அழிவற்ற பரம்பொருளே, சுட்டி அறியும் அறிவுக்கும் அப்பால் நின்று சிவஞானத்தால் அறியக்கூடிய பேரறிவே, ஒளி பொருந்திய பளிங்கின் பேரொளியினை உடைய மாணிக்கமலையே, அடியார் உள்ளத்தில் இனிக்கும் தேன் போன்றவரே, அன்புடைய மெய்யன்பர்களது உள்ளத்திலே பேரானந்தத்தை விளைவிக்கும் கனியே, சிற்றம்பலத்திலுள்ள பொன்னம்பலம் எனும் நடன அரங்கில் தெய்வீகத் திருநடனத்தைப் புரியும் உமது சிறப்பை அடியவனாகிய நான் எவ்வாறு வியந்து உரைப்பது என்பதைக் கூறி அருள்வீராக.

## பதவிளக்கம்

**உலப்பு** - அழிவு **அம்பலம்** - சிற்றம்பலம் **விளம்பு** - உரை

## (ஊ) திருப்பல்லாண்டு

ஆதியும் அந்தமும் இல்லா இறைவனை, பல்லாண்டு வாழ்வாயாக என வாழ்த்திப்பாடுகின்ற திருப்பாடல்களே திருப்பல்லாண்டு எனப் படும். சைவத்திருமுறைகளில் ஒன்பதாம் திருமுறையில் இந்நூல் இடம்பெறுகின்றது. ஒரு சமயம் தில்லை நடராஜப் பெருமானின் மார்கழித் திருவாதிரைத் திருநாளில் தேர் ஓடாது தடைப்பட்டிருந்தது. அப்பொழுது சேந்தனார் இறைவனைப் ''பல்லாண்டு வாழ்க'' என்று பாடியதும் தேர் ஓடியது.

தலம் - தில்லை பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகுங் கழற உழறி
உமை மணவாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

திருச்சிற்றம்பலம்

## பொழிப்புரை

பெருமையும், செல்வமும் கொண்டு விளங்குகின்ற தில்லையில் உள்ள சிவலோக நாயகன் திருவடிக் கீழிருந்து மற்றொருவரும் பெறாத சிவஞானத்தை நான் பெற்றேன். நான் பெற்ற பேற்றினை இவ்வுலகில் வேறு யார்தான் பெறுவார்? உமை மணவாளனுக்கு நாம் ஆட்பட்ட தன்மையினை ஊரும் உலகும் புகழ்ந்து பேச நாக்குழறி பூமியில் உள்ளோரும், விண்ணுலகில் உள்ள தேவர்களும் அறியும்படி அவரைப் பல்லாண்டு வாழ்வாயாக என்று வாழத்துவோமாக.

## பதவிளக்கம்

| | | |
|---|---|---|
| **சீர்** | - | பெருமை |
| **திரு** | - | செல்வம் |
| **பொலிய** | - | விளங்க |
| **சிவலோக நாயகன்** | - | தில்லையில் எழுந்தருளியுள்ள இறைவன் |
| **அறிவு** | - | மெய்ஞ்ஞானம் |
| **பார்** | - | பூமி |
| **விசும்பு** | - | ஆகாயம் |

## (எ) பெரியபுராணம்

சைவத்திருமுறைகளுள் பெரியபுராணமும் ஒன்று. இப்புராணம், பக்தி நெறியில் நின்று இறைவனுக்கும் இறையடியார்களுக்கும் தொண்டு செய்து முத்தியடைந்த அறுபத்து மூன்று அடியார்கள் வரலாற்றைக் கூறுகின்றது. இறைவனால் ‘‘உலகெலாம்...’’என்று அடியெடுத்துக்கொடுக்க சேக்கிழார் பெருமானால் பாடப்பட்டதாகும். பெரியபுராணம் திருத்தொண்டர் புராணம் எனவும் சிறப்பிக்கப்படுகின்றது. பன்னிரு திருமுறைகளுள் பன்னிரண்டாவதாக இந்நூல் இடம்பெறுகிறது.

திருச்சிற்றம்பலம்

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

திருச்சிற்றம்பலம்

## பொழிப்புரை

*உலகத்தில் உள்ள யாவரும் அறிந்து துதிப்பதற்கு அரியவனும், பிறைச்சந்திரனையும் கங்கா நதியையும் சடாமுடியில் தரித்தவனும் அளவில்லாத சோதி வடிவானவனும், தில்லைச் சிற்றம்பலத்தில் ஆனந்த நடனமாடுகின்றவனுமாகிய சிவபெருமானின் மலர்ந்த திருவடிகளை வாழ்த்தி வணங்குவோமாக.*

## பதவிளக்கம்

| | | |
|---|---|---|
| ***நிலவு*** | - | *சந்திரன்* |
| ***நீர்*** | - | *கங்கை* |
| ***சிலம்படி*** | - | *ஒலிக்கின்ற திருவடி* |
| ***அலகில் சோதி*** | - | *எல்லையில்லா ஒளி* |
| ***அம்பலம்*** | - | *தில்லைச் சிற்றம்பலம்* |

## பயிற்சிகள்

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. தாண்டக வேந்தர் எனும் சிறப்புப்பெயரைப் பெற்றவர் யார்?
2. திருமணக்கோலத்தில் சிவனால் ஆட்கொள்ளப்பட்ட நாயனார் யார்?
3. மாணிக்கவாசக சுவாமிகளால் அருளப்பெற்ற பாடல்கள் யாவை?
4. திருவிசைப்பா என்பதன் பொருள் யாது?
5. திருத்தொண்டர் புராணம் எனச்சிறப்பிக்கப்படும் நூல் யாது?

## செயற்பாடு

1. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசநாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள், ஆகியோர் அருளிய பாடல்கள் சிலவற்றை எழுதி மனனம் செய்து, பண்ணோடு பாடிக்காட்டவும்.

**2. பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.**

| பாடல் முதலடி | பாடியவர் | நூலின்பெயர் | தலம் | பண் |
|---|---|---|---|---|
| 1. இடரினும் தளரினும் | | | | |
| 2. ஓசையொலியெலாம் | | | | |
| 3. பித்தாபிறை | | | | |
| 4. பூசுவதும் | | | | |
| 5. ஒளிவளர் | | | | |
| 6. சீரும் திருவும் | | | | |
| 7. உலகெலாம் | | | | |

## பாடச்சுருக்கம்

- திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவராலும் தேவாரம் அருளப்பெற்றது.
- மாணிக்கவாசக சுவாமிகளால் திருவாசகம் பாடப்பட்டது. இது சைவத் திருமுறைகளில் எட்டாந்திருமுறையாகக் காணப்படுகின்றது.
- இறைவனின் பெருமையைப் பாடுகின்ற தெய்வத்தன்மை பொருந்திய இசைப்பாடலே திருவிசைப்பா எனப்படும்.
- இறைவனைப் ''பல்லாண்டு வாழ்வாயாக'' என வாழ்த்திப் பாடும் பாடல்கள் திருப்பல்லாண்டு ஆகும். இதனைச் சேந்தனார் பாடியருளினார்.
- சைவத்திருமுறைகளில் பன்னிரண்டாந்திருமுறையாக இடம் பெறும் நூல் பெரியபுராணம் ஆகும். இது சேக்கிழாரால் பாடப்பட்டது.

## தோத்திரப்பாடல்கள் - திருப்புகழ்

சைவத்திருமுறைகள் தொகுக்கப்பட்டதன் பின்பு பாடப்பட்ட பாடல்கள் தோத்திரப்பாடல்கள் எனப்படும். தோத்திரப்பாடல்களில் திருப்புகழ், கந்தரனுபூதி, கந்தரலங்காரம், அபிராமி அந்தாதி, சகலகலா வல்லிமாலை முதலியன அடங்கும்.

திருப்புகழைப்பாடியவர் அருணகிரிநாதர். முருகப்பெருமானது திருத்தக்க புகழைக் கூறும் பாடல் திருப்புகழ் எனப்பெயர் பெறும். திருப்புகழ் இனிய சந்தமும், ஓசை நயமும், கருத்துச் செறிவும் கொண்டது. தாளச் சிறப்புமிக்கது. அருணகிரிநாதர் பாடிய பொதுத்திருப்புகழ்களில் ஒன்று இங்கே தரப்படுகின்றது.

இசைந்த ஏறும் கரியுரி போர்வையும் ... எழில் நீறும்
இலங்கு நூலும் புலியதளாடையும் ... மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரமணி மாலையும் ... முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய ... குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற ... முனிவோனே
உகந்த பாசங் கயிறொடு தூதுவர் ... நலியாதே
அசந்த போதென் துயர்கெட மாமயில் ... வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய ... பெருமாளே.

## பொழிப்புரை

*பொருந்திய இடபவாகனமும், யானைத்தோற்போர்வையும், அழகிய திரு நீற்றுப்பூச்சும், விளங்குகின்ற பூணூலும், புலித்தோல் ஆடையும், கையில் மழுவும், மானும், காதில் அசையும் தோடும், திருமுடிமீது அணிந்துள்ள சிவபெருமான் அன்போடு வணங்கி கீழே இருக்க, அவருக்கு மேலே இருந்து பிரணவப்பொருளை உபதேசம் செய்த சாத்திய வேலானது தோள்மீது பொருந்தியிருக்கின்ற முருகப் பெருமானே! வரத்தால் உயர்ந்த சூரனை அவன் சுற்றத்தோடு அழியும்படி கோபித்தவரே! பாசக்கயிற்றை விருப்புடன் கையில் பிடித்த இயமதூதுவர் (என்னை மரணவேதனையில்) வருத்தாமல் அடியேன் சோர்வுற்றிருக்கும் போதும் எனது துயரை நீக்கப் பெரிய மயில் மீது ஏறி என் முன்னே வந்தருள வேண்டும்.*

## பதவிளக்கம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ஏறு** | - | *இடபவாகனம்* | **கரி** | - | *யானை* |
| **நூல்** | - | *முப்புரிநூல் (பூணூல்)* | **எழில்** | - | *அழகு* |
| **சிரம்** | - | *முடி* | **முனிவு** | - | *கோபம்* |
| **புயம்** | - | *தோள்* | | | |

## பயிற்சிகள்

**பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. தோத்திரப்பாடல்கள் என்றால் என்ன?
2. தோத்திரப்பாடல்களுள் அடங்கும் மூன்று நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
3. திருப்புகழை அருளியவர் யார்?
4. திருப்புகழின் சிறப்புகள் மூன்று தருக.

## செயற்பாடு

1. பாடநூலில் உள்ள திருப்புகழை மனனம் செய்து பாடுக.
2. வேறு திருப்புகழ்ப் பாடல்களை எழுதி, வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

## பாடச்சுருக்கம்

- சைவத்திருமுறைகள் தொகுக்கப்பட்டதன் பின்பு பாடப்பட்ட பாடல்கள் தோத்திரப் பாடல்கள் எனப்படும்.
- தோத்திரப்பாடல்களில் திருப்புகழ், கந்தரனுபூதி, கந்தரலங்காரம், அபிராமி அந்தாதி, சகலகலாவல்லிமாலை முதலியன அடங்கும்.
- அருணகிரிநாதரால் திருப்புகழ் பாடப்பட்டது.
- திருப்புகழ் இனிய சந்தம், ஓசைநயம், கருத்துச்செறிவு, தாளச்சிறப்பு என்பவற்றைக் கொண்டமைந்தது.

# 10 ஆலய வழிபாடு



ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் ஜோதி வடிவான இறைவன் ஆன்மாக்களின் வழிபாட்டை ஏற்று அருள் புரியும் இடம் ஆலயமாகும். சைவசமயிகளுக்கு ஆலய வழிபாடு மிகவும் இன்றியமையாதது. இத்தகைய கோயில்களுக்கு நாள் தோறும் சென்று முறைப்படி வழிபாடு செய்தல் வேண்டும். தினமும் செல்ல முடியாதவர்கள் செவ்வாய், வெள்ளி, மாதப்பிறப்பு, வருடப்பிறப்பு, தைப்பொங்கல் ஆகிய விஷேட விரத நாட்களில் சென்று வழிபடலாம்.

ஆலயம் புனிதமான இடமாதலால் அங்கு செல்வோர் நீராடி, தோய்த்து லர்ந்த ஆடையணிந்து, விபூதி தரித்து, தூய்மையுடன் செல்ல வேண்டும். ஆலயம் செல்லும்போது பழம், பாக்கு, வெற்றிலை, கற்பூரம், தேங்காய், பால், இளநீர், பூக்கள் முதலிய பொருட்களைத் தூய்மையான தட்டில் வைத்து அரைக்குமேல் தாங்கி இறை சிந்தையுடன் செல்ல வேண்டும்.

ஆலயத்தை அண்மித்ததும் கை, கால், கழுவி, சிவநாமங்களை உச்சரித்த வண்ணம் தூலலிங்கமாகிய கோபுரத்தை முதலில் வணங்க வேண்டும். ஆலயத்திற்கு உள்ளே சென்று கொடித்தம்பத்தையும், பலிபீடத்தையும் வணங்கி அப்பால் ஆண்கள் அட்டாங்க நமஸ்காரமும் பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்தல் வேண்டும்.

அதனை அடுத்து முதலில் விநாயகரை வழிபடுதல் வேண்டும். மூலமூர்த்தியாகிய சிவபிரானையும் உமாதேவியாரையும் வணங்கி, அர்ச்சனை செய்வித்து, விபூதி வாங்கித் தரித்துக் கொள்ள வேண்டும். அதன் பின் நடராஜர், தட்சணாமூர்த்தி, சோமஸ்கந்தர், சந்திரசேகர், சுப்பிரமணியர், வைரவர் முதலிய மூர்த்திகளை வழிபடும்போது இரண்டு கைகளையும் மார்பில் அல்லது சிரசில் குவித்து வழிபட்டு, இறுதியாக சண்டேஸ்வரரை வணங்கி மூன்று முறை கைகொட்டி சிவதரிசன பலனைத் தந்து உதவுமாறு பிரார்த்திக்க வேண்டும்.

ஆலயத்தின் வலப்பக்கமாக வந்து சிவசந்நிதியை அடைந்துஇடப தேவருடைய கொம்பின் நடுவாக சிவலிங்கப் பெருமானை வணங்கி, பலிபீடத்திற்கு அப்பால் மும்முறை வணக்கம் செய்த பின்னர் அமைதியான ஓரிடத்தில் இருந்து திருவைந்தெழுத்து அல்லது இறைநாமத்தை இயன்றவரை உச்சரிக்க வேண்டும்.



ஆலயத்தில் நாம் செய்யக்கூடிய தொண்டுகள் பல உள்ளன. அவற்றுள் கோயிலைக்கூட்டுதல், கழுவுதல், பாத்திரங்கள் , விளக்குகள் என்பவற்றை விளக்குதல், தூபமிடுதல், விளக்கேற்றுதல், சாமரை வீசுதல், தீவர்த்தி பிடித்தல், குடை, ஆலவட்டம், கொடி என்பனவற்றைப் பிடித்தல், பூந்தோட்டம் அமைத்தல், பூந்தோட்

டத்திற்கு நீர் ஊற்றுதல், பூக்கொய்தல், மாலைகட்டுதல் என்பனவும் ஆலயத்தொண்டு களில் அடங்கும். அவ்வாறான செயல்களை நாமும் செய்ய முன்வர வேண்டும்.



ஆலயம் சென்று வழிபடுவதனால் ஐம்பொறிகளும் ஒடுங்கி மனம் ஒருநிலைப்பட வழியேற்படுகின்றது. மேலும் ஆலயத்தில் தெய்வ (ஒளி) அருள் நிறைந்திருப்பதால் எமது மனம் அமைதி பெறும், வாழ்வு வளம் பெறும், ஆன்மா ஈடேற்றமடையும்.

''கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்''

''ஆலயம் தொழுவது சாலவும் நன்று''



## பயிற்சிகள்

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. ஆலயம் என்பதன் பொருள் யாது?
2. ஆலயத்திற்கு கொண்டு செல்லப்படும் பொருட்கள் எவை?
3. ஆலயத்தில் செய்யப்படும் நமஸ்காரங்களை குறிப்பிடுக.
4. ஆலயத்தில் நீங்கள் செய்யும் தொண்டுகள் 5 தருக.
5. ஆலய வழிபாட்டின் நன்மைகள் 3 தருக.

**கீழே தரப்பட்ட சொற்களை வைத்து வெற்றிடம் நிரப்புக.**

***(ஆலயம், பூசைப்பொருட்கள், விநாயகர், சண்டேசுவரர், திருமுறைப்பாடல்கள்)***

1. ஆன்மா லயப்படும் இடம் ________________ ஆகும்.
2. சுவாமி சந்நிதியில் ________________ ஓதல் வேண்டும்.
3. ஆலய வழிபாட்டில் முதலில் வழிபடும் தெய்வம் ________________ ஆவார்.
4. ஆலய வழிபாட்டில் இறுதியாக வழிபடும் தெய்வம் ________________ ஆவார்.
5. பழம், பாக்கு, வெற்றிலை, கர்ப்பூரம், தேங்காய் என்பன ________________ என அழைக்கப்படுகின்றன.

## செயற்பாடு

1. ஆலயத்தில் செய்யக்கூடிய தொண்டுகள் பற்றி சக மாணவர்களுடன் கலந்துரையாடல்.

2. ஆசிரியருடன் பாடசாலைக்கு அருகிலுள்ள ஆலயத்திற்குச் செல்க. அங்கு நடைபெறும் வழிபாட்டு ஒழுங்குமுறையை அவதானித்தல். ஒவ்வொருவரையும் ஒழுங்கு முறையின்படி ஒழுகுவதற்கு வழிப்படுத்தல்.

## பாடச்சுருக்கம்

- ஆன்மா லயப்படும் இடமாக ஆலயம் விளங்குகின்றது.
- ஆலயத்திற்கு தினந்தோறும் செல்லல் சிறந்தது. முடியாதவர்கள் விஷேட தினங்களிலாவது சென்று வழிபடுவது அவசியம்.
- ஆலயத்தில் நாம் செய்யக்கூடிய தொண்டுகள் பல உள்ளன.
- ஆலயம் சென்று வழிபடுவதனால் மனம் ஒரு நிலைப்படுகின்றது.

# 11 சமய குரவர் நால்வர்

சைவசமய குரவர்கள் என அழைக்கப்படுபவர்கள், திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தர மூர்த்தி நாயனார், மாணிக்க வாசக சுவாமிகள் என்னும் நால்வருமாவர். சைவசமய குரவர் சிவனைக் குறித்து திருமுறைப் பாடல்கள் பாடி, பல அற்புதங்களைச் செய்து, சைவசமயமே மெய்ச்சமயம் என்று நிலை நிறுத்தியவர்கள் ஆவர்.

தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் இருந்த சிவதலங்களுக்கு, சமய குரவர் நால்வரும் கால்நடையாக யாத்திரை செய்தனர். அத்தலங்களின் மீது திருமுறைப் பாடல்கள் பாடினர். அற்புதங்கள் பலவற்றைச் செய்தனர். அதனால் சைவநெறி தழைத்தது. சைவத்தின் பெருமை நிலைநாட்டப்பட்டது. அத்தகைய பெருமை வாய்ந்தோர் பற்றி, நாம் கற்றல் அவசியமாகும். அவர்கள் செய்த பணியை முன்மாதிரியாகக் கொண்டு, இயன்றளவு சமய , சமூகப் பணிகளைச் செய்ய நாம் முன்வர வேண்டும்.

## (அ) திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்



சோழ நாட்டின் சீர்காழி என்னும் பகுதியில் வாழ்ந்த சிவபாத விருதயருக்கும், பகவதி அம்மையாருக்கும் மகனாக, திருஞான சம்பந்தர் பிறந்தார்.


சிவபாதவிருதயர் ஒருநாள் சீர்காழிப் பகுதியிலுள்ள தோணிபுரக் கோயிலுக்குச் சென்றார். குழந்தையும் தந்தையுடன் சென்றது. குழந்தையைத் திருக்கோயில் குளக்கரையில் இருத்திவிட்டு, தந்தை குளத்தில் நீராடினார். நீரினுள் மூழ்கிய தந்தையைக் காணாது ஏங்கிய குழந்தை, 'அம்மையே, அப்பா' என்று அழுதது. அப்போது சிவபெருமான் உமாதேவியாரோடு அங்கே தோன்றினார். உமாதேவியார் தம் திருமுலைப்பாலைக் குழந்தைக்கு ஊட்டினார். அதனைப் பருகிய குழந்தை சிவஞானத்தையும், கலை ஞானத்தையும் பெற்றது.

நீராடி முடித்து விட்டு வந்த தந்தை, குழந்தையின் வாயிலே இருந்து வழிந்த பாலைக் கண்டார். அது பற்றி வினவினார். அப்போது குழந்தை கோயிலைச் சுட்டிக் காட்டி 'தோடுடைய செவியன்.....' என்று தொடங்கும் பதிகத்தைப் பாடியது. மூன்று வயதில் தேவாரம் பாடிய அக்குழந்தை ஞானசம்பந்தர் என அழைக்கப்பட்டார்.

ஞானசம்பந்தர் பல தேவாரங்களைப் பாடினார் அற்புதங்களைச் செய்தார். சிவபெருமானிடம் பொற்றாளம், முத்துக்குடை, முத்துச் சின்னம், முத்துப்பந்தர் பெற்றார். படிக்காசு பெற்று, பஞ்சம் தீர்த்தார். திருமறைக்காடு என அழைக்கப்படும் வேதாரணியத்தில் வேதங் களினாலே பூட்டப்பட்டுத் திருநாவுக்கரசு நாயனாராற் திறக்கப்பட்ட திருக்கதவை அடைக்கச் செய்தார். பாண்டிய மன்னனின் நோயை நீக்கி, அவரைச் சைவனாக்கினார்.

ஆளுடைய பிள்ளையார், பாலறாவாயர், பரசமய கோளரி என்பன அவரது வேறு பெயர்களுட் சிலவாகும். அவர் பதினாறு ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்து, வைகாசி மூல நாளில் சோதியுட் கலந்தார்.

## (ஆ) திருநாவுக்கரசு நாயனார்



திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தரின் காலத்தைச் சேர்ந்தவர். கி.பி 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அவர் திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் வாழ்ந்த புகழனாருக்கும் மாதினியாருக்கும் மகனாகப் பிறந்தார். அவரது பிள்ளைத் திருநாமம் மருணீக்கியார் என்பதாகும். அவர் இளமைக் காலத்தில் பல துன்பங்களை அனுபவித்தார். சமண சமயத்தில் சேர்ந்து, அச்சமய நூல்களைக் கற்றுத் தேர்ந்து தருமசேனர் என்னும் பெயருடன் சமண சமய குருவாகத் திகழ்ந்தார்.


தமக்கை திலகவதியார் தம்பியைச் சைவத்துக்கு மீட்டுத் தரும்படி இறைவனை வேண்டினார். சிவபெருமான் அவர் கனவில் தோன்றி, 'தம்பியை மீட்டுத் தருவோம்' என்றார். தருமசேனருக்குச் சூலைநோய் உண்டாகியது. அதனைச் சமணர்களால் குணப்படுத்த முடியவில்லை. அதனால், அவர் தமக்கையாரிடம் வந்தார். தமக்கையார் கொடுத்த திருநீற்றை மேனியில் பூசினார். தமக்கையார் அவரை திருவதிகை வீரட் டானேச்சர ஆலயத்துக்கு அழைத்துச் சென்றார். அவர் கோயிலை வலம் வந்து 'கூற்றாயினவாறு...' என்று தொடங்கும் பதிகத்தைப் பாட, சூலைநோய் நீங்கியது. அவ்வேளை 'நாவுக்கரசு' என்னும் பெயர் இறைவனால் அவருக்கு வழங்கப்பட்டது.

திருநாவுக்கரசர் இறையருள் பெற்றதை சமணர்கள் அறிந்தனர். பல்லவ மன்னன் மகேந்திர வர்மனின் துணையுடன் அவருக்குப் பல கொடுமைகளைச் செய்தனர். நாவுக்கரசர் இறைவன் மீது தேவாரம் பாடி, அக்கொடுமைகளில் இருந்து மீண்டார். பல்லவ மன்னனையும் சைவத்துக்கு மாறச் செய்தார். பின்னர் நாவுக்கரசர், உழவாரம் கொண்டு ஆலயங்களில் புல், பூண்டுகளைச் செதுக்கி சரியைத் தொண்டு செய்துவரலானார்.

நாவுக்கரசர் இறையருளால் பல அற்புதங்களைச் செய்தார். சமணர் களாலே ஏழு நாட்கள் சுண்ணாம்பு அறையில் அடைக்கப் பட்டிருந்தும், வேகாது பிழைத்தமை, சமணர்கள் கொடுத்த நஞ்சு கலந்த பாற்சோறை உண்டும் சாகாது பிழைத்தமை, கொல்ல வந்த யானை அவரை வணங்கிச் சென்றமை, கல்லுடன் கட்டி கடலில் விட்ட போது, கல் தெப்பமாக மிதந்தமை, சம்பந்தருடன் சேர்ந்து படிக்காசு பெற்று, பஞ்சம் தீர்த்தமை, திருமறைக்காட்டுக் கோயில் கதவு திறக்கப்பாடியமை என்பன அவர் செய்த அற்புதங்களுட் சிலவாகும்.

நாவுக்கரசு, அப்பர், ஆளுடைய அரசு, உழவாரப் படையாளி என்பன அவருடைய வேறு பெயர்களாகும். திருநாவுக்கரசர், இவ்வுலகில் எண்பத்தொரு ஆண்டுகள் வாழ்ந்து சைவத்துக்குப் பணியாற்றி சித்திரை மாதச் சதய நன்னாளில் முத்தி அடைந்தார்.

# (இ) சுந்தரமூர்த்தி நாயனார்



இவர் திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் வாழ்ந்த சடையனாருக்கும், இசைஞானியாருக்கும் மகனாகப் பிறந்தவர். நம்பி யாரூரர் என்பது அவரது பிள்ளைத் திருநாமம் ஆகும்.

நம்பியாரூரர், அந்நாட்டு அரசனாகிய நரசிங்கமுனையரினால் வளர்க்கப்பட் டார். அவர் வளர்ந்து, திருமணப்பருவத்தை அடைந்ததும், அவருக்கு புத்தூர் சடங்கவி சிவாச்சாரியார் என்பவரது மகளைத் திருமணம் பேசினார். திருமண வேளையில் இறைவன் கிழப்பிராமண வடிவில் வந்தார் மணப்பந்தலில் வீற்றிருந்த சுந்தரருடன் வாதம் செய்தார். பின் திருவருட்துறையில் வழக்குத் தொடுத்து சுந்தரரைத் தடுத்தாட் கொண்டார். அவ்வேளையில் சுந்தரர், கிழப்பிராமணராக வந்த சிவபிரானை ‘பித்தன்’ என்று வன்சொற் கூறி இகழ்ந்தார். அதனால், சுந்தரர், வன்றொண்டர் என்னும் பெயர் பெற்றார். ‘‘பித்தா பிறை சூடி....’’ என்று தொடங்கும் முதற் பதிகத்தைப் பாடினார்.

சுந்தரர் பல திருத்தலங்களுக்குச் சென்றார். அங்குள்ள இறைவனை வழிபட்டு, தேவாரம் பாடினார். பல அற்புதங்களைச் செய்தார். செங்கற்களைப் பொன்னாகப் பெற்றுக் கொண்டமை, ஆற்றிலிட்ட பொன்னைக் குளத்தில் எடுத்தமை, முதலை உண்ட பிள்ளையை மீட்டமை என்பன அவரது அற்புதங்களுள் சிலவாகும்.

வன்றொண்டர், ஆலாலசுந்தரர், தம்பிரான் தோழர் என்பன சுந்தரருடைய மறு பெயர்களாகும். சுந்தரர் பதினெட்டு ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்து ஆடிமாதச் சோதி நன்னாளில் திருக்கையிலையை அடைந்தார்.

## (ஈ) மாணிக்க வாசக சுவாமிகள்



இவர் பாண்டிய நாட்டிலே திருவாதவூரில் வாழ்ந்த சம்புபாதா சிரியருக்கும் சிவஞானவதியாருக்கும் மகனாகப் பிறந்தார். அவரது பிள்ளைத் திருநாமம் திருவாதவூரர் என்பதாகும். அவர் பாண்டிய மன்னனுடைய முதலமைச்சராகப் பணிபுரிந்தார். அரச னின் வேண்டுகோளுக்கு அமைய, குதிரை வாங்கச் சென்றபோது, திருப்பெருந்து றையில் பரமாசாரியாக வந்த இறைவனால் ஆட்கொள்ளப்பட்டவர். குதிரை வாங்குவதற்கு வந்த நோக்கத்தை மறந்தமையால் அரசனால் தண்டனை பெற்றவர்.

இறைவன், திருவாதவூரரின் துன்பங்களை நீக்கினார். திருவாதவூரர் பொருட்டு, நரியைப் பரியாக்கினார். வைகை நதியைப் பெருக்கெடுக்கச் செய்தார். இறைவனின் கருணையை உணர்ந்த திருவாதவூரர், பதவியைத் துறந்து, மீண்டும் திருப்பெருந்து றையை அடைந்து பரமாசாரியரிடம் உபதேசம் பெற்றார்.

திருவாதவூரர் பல திருத்தலங்களுக்குச் சென்று, திருவாசகம் பாடி வழிபட்டார்.

திருவாசகப் பாடலில் மகிழ்ந்த இறைவன், அவருக்கு மாணிக்கவாசகர் என்னும் திருநாமத்தைச் சூட்டினார்.

மாணிக்கவாசகர் பல அற்புதங்களைச் செய்தார். ஊமைப் பெண்ணைப் பேச வைத்தார். இறைவன் அடியவராக வந்து, அவருடைய திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் கேட்டு எழுதும் பேறு பெற்றார். ஈற்றில் எல்லோரும் காண கனகசபையுட் புகுந்து, இறைவனுடன் இரண்டறக் கலந்தார். முப்பத்திரண்டு ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்த இவர் இறைவனுடன் கலந்த தினம் ஆனி மகம் ஆகும்.

## பயிற்சிகள்

**பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க**

| நாயன்மார் பெயர் | தாய், தந்தை பெயர் | மறுபெயர் | செய்த அற்புதங்கள் |
|---|---|---|---|
| 1. திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் | | | |
| 2. திருநாவுக்கரசு நாயனார் | | | |
| 3. சுந்தரமூர்த்தி நாயனார். | | | |
| 4. மாணிக்கவாசக சுவாமிகள் | | | |

## செயற்பாடு

1. 'நாயன்மார் நால்வர்' என்ற பொருளில் 3 நிமிடம் உரை நிகழ்த்துக.

2. நால்வரும் செய்த அற்புதங்கள், தொண்டுகள் என்பவற்றை எழுதி, வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

3. ஆசிரியரின் உதவியுடன் நால்வரின் குரு பூசைகளை வகுப்பறையில் மேற்கொள்க.

## பாடச்சுருக்கம்

- நாயன்மார் நால்வரும் இறைவனின் அருளைப் பெற்றவர்கள்.
- சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோர் தேவாரம் பாடியும் மாணிக்க வாசகர் திருவாசகம் பாடியும் இறைவனை வழிபட்டனர்.
- நால்வரும் பல அற்புதங்களைச் செய்தவர்கள்.
- நால்வரின் பெற்றோர், பிறந்த நாடு, ஊர், பிள்ளைத் திருநாமம், மறுபெயர், செய்த அற்புதங்கள் முதலான விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

# 12 ஞானப்பிரகாச முனிவர்



ஞானப்பிரகாசர் யாழ்ப்பாணத்திலுள்ள திருநெல்வேலி என்னும் இடத்தில் கி.பி 1625 ஆம் ஆண்டில் பிறந்தார். அவருடைய தந்தையார் பெயர் காராளப்பிள்ளை என்பதாகும். அவர் கல்வியும், பெருஞ் செல்வமும் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவர். ஞானப்பிரகாசர் வாழ்ந்த காலத்தில் யாழ்ப்பாண இராச்சியமானது போர்த்துக் கேயரின் ஆட்சியின் கீழ் அடிமைப்பட்டுக் கிடந்தது.

போர்த்துக்கேயர் ஆட்சியில், ஒவ்வொரு வீட்டினரும் ஓர் ஒழுங்குமுறைப்படி ஒவ்வொரு பசுவை, பறங்கியரின் உணவுக்காகக் கொடுத்தல் வேண்டும் என்ற சட்டத்தை விதித்திருந்தனர். அப்பொழுது ஞானப்பிரகாசர் இளமைப் பருவத்தை அடைந்திருந்தார். சைவ மரபில் வளர்ந்த அவர் உயிர்களிடத்தில் மிகுந்த இரக்கம் கொண்டவராக விளங்கினார். பசு மாட்டைக் கொலை செய்யும் கொடுந்தொழிலுக்கு உதவியாக இருக்க, அவரது அருள் நிறைந்த உள்ளம் ஒப்பவில்லை. எனவே, அவரால் போர்த்துக்கேயரின் சட்டத்திற்கு அடிபணிய முடியவில்லை. பசு வழங்கும் முறை வந்ததும், அவர் இரவோடிரவாக யாழ்ப்பாணத்தை விட்டு, தமிழகம் சென்றார்.

ஞானப்பிரகாசர் தமிழ் நாட்டைத் தாயகமாகக் கொண்டு வாழ்ந்தார். வேதாரணியம் என்னும் இடத்தில் தங்கியிருந்து திருத்தொண்டுகள் புரிந்து வந்தார். பின்னர் அங்கிருந்து திருப்புகலூர் சென்று, அண்ணா சாமி ஆசாரியரிடத்தில் சிவதீட்சை பெற்ற பின்னர், சிதம்பரம் சென்றார். நடராசப் பெருமானிடம் கொண்ட பக்தியால் சிதம்பரத்தை வசிப்பிடமாகக் கொண்டார்.

ஞானப்பிரகாசர் ஒருமுறை தமிழ்நாட்டின் வடக்கே பயணம் செய்து, வங்காளம் என்னும் நாட்டைச் சென்றடைந்தார். அங்கிருந்த காலத்தில் பிராமணத் துறவி ஒருவரிடம் வடமொழியிலுள்ள தருக்கம், மீமாம்சை, வியாகரணம் முதலியவற்றைக் கற்றார். குரு உபதேசம் பெற்றார். குருவின் கட்டளைப்படி திருவண்ணாமலை ஆதீனத்தை அடைந்து விசேட தீட்சை பெற்று, துறவு வாழ்க்கையை மேற்கொண்டார். துறவியான காரணத்தால், முனிவர் என்ற சிறப்புப் பெயரால் போற்றப்பட்டார்.

ஞானப்பிரகாச முனிவர், திருவண்ணாமலை ஆதீனத்தில் இருந்தபொழுது, சைவம், சைவசித்தாந்தம், தமிழ்மொழி, வடமொழி என்பவற்றில் நல்ல புலமையும், சிறந்த தேர்ச்சியும் பெற்றதனால் தமிழ்மொழியிலும், வட மொழியிலும் சைவ சித்தாந்த நூல்களை இயற்றும் ஆற்றலைப் பெற்றார்.

சிறிது காலத்தின் பின், ஞானப்பிரகாச முனிவர் திருவண்ணா மலையிலிருந்து சிதம்பரம் திரும்பினார். சிதம்பரத்தில் ஞானப் பிரகாசம் என்னும் குளத்தையும், அதனை அடுத்து மடம் ஒன்றையும் தாபித்தார். அவற்றின் அருகில் ஆச்சிரமம் ஒன்றையும் அமைத்தார். தமது வாழ்வின் இறுதிக் காலத்தில் இறை பணிகளிலும், சமய நூல்களுக்கு உரை எழுதுவதிலும் ஈடுபட்டார். அவர் சிவஞான சித்தியார் சுபக் கத்திற்குத் தமிழில் எழுதிய உரை சிறப்பு வாய்ந்த தொன்றாகும். ஞானப்பிரகாசமுனிவர் வட மொழியில் சித்தாந்த சிகாமணி, பிராமண தீபிகை, பிரசாத தீபிகை முதலான நூல்களையும் பௌட்கராகம் விருத்தி, சிவஞானபோத விருத்தி முதலிய உரை நூல்களையும் எழுதியுள்ளார். ஈழத்திலிருந்து சென்று, தமிழகத்தில் சைவ சித்தாந்தப் பணிபுரிந்த ஞானப்பிரகாச முனிவர் கி.பி 1658ம் ஆண்டு பங்குனி மாதம் பூச நட்சத் திரத்தில் இறைபதம் அடைந்தார். முப்பத்து மூன்று ஆண்டுகள் உலகிலே வாழ்ந்த அவர், மிகச் சிறிய வயதிலே பெரும் சித்தாந்த சிந்தனையாளர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார்.

## பயிற்சிகள்

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. ஞானப்பிரகாச முனிவரிடம் காணப்பட்ட நற்பண்புகள் இரண்டு தருக.
2. அவர் யாழ்ப்பாணத்தை விட்டு, தமிழகம் சென்றதற்கான காரணம் யாது?
3. ஞானப்பிரகாச முனிவர் சிதம்பரத்தில் செய்த பணிகள் இரண்டு தருக.
4. ஞானப்பிரகாச முனிவர் சைவத்துக்கு ஆற்றிய பணிகள் இரண்டு தருக.

## செயற்பாடு

1. ஞானப்பிரகாச முனிவர் வரலாற்றைப் படித்த பின்னர், நீங்கள் கற்றுக் கொண்ட முக்கிய விடயங்களை அட்டவணைப்படுத்தி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

## பாடச்சுருக்கம்

- ❑ ஞானப்பிரகாச முனிவர் யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்தவர்.
- ❑ உயிர்களிடம் கொண்ட இரக்கத்தால், பசுவதைக்கு அஞ்சி, தமிழகம் சென்றார்.
- ❑ அவர் சைவம், சைவ சித்தாந்தம், தமிழ்மொழி, வட மொழி என்பவற்றில் புலமை பெற்றிருந்தார்.
- ❑ ஞானப்பிரகாச முனிவர் சிதம்பரத்தில் குளம், மடம், ஆச்சிரமம், என்பவற்றைத் தாபித்துப் பணிபுரிந்தார்.
- ❑ சமய நூல்களுக்கு உரை எழுதினார்.
- ❑ ஞானப்பிரகாச முனிவர் சைவசித்தாந்த நூல்களையும் எழுதினார்.

# 13 முப்பொருள்



சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொள்ளும் சைவசமயம், முடிந்த முடிபான பதி, பசு, பாசம் ஆகியவற்றின் உண்மை பற்றிப் பேசுகின்றது. இம் முப்பொருள்களும் என்றும் உள்ளவை, ஒன்றில் இருந்து மற்றொன்று தோன்றியது அன்று. இம்முப்பொருள்களையும் இறை, உயிர், தளை என்றும் கூறுவர். இவை அநாதியான நித்திய பொருள்களாகும்.

## பதி

பதியை இறை, கடவுள், சிவம், முதல்வன், பரமசிவன் எனவும் அழைக்கலாம். பதி என்பது தலைவர் எனப் பொருள்படும். பதி என்றும் உள்ளவர், எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர், விருப்பு வெறுப்பு இல்லாதவர், மிக்க அருளுடையவர், பதியை நாம் நமது புறக்கண்களாற் காண முடியாது. அவர் எமது மனதிற்கும், சொல்லுக்கும், செயலுக்கும் அப்பாற்பட்டவர். அவரை நாம் நமது அறிவினாலேயே உணர முடியும். பதிக்கு சொரூபலக்கணம், தடத்தலக்கணம் என

இரண்டு இலக்கணங்கள் கூறப்படுகின்றன. தடத்தலக்கணத்தில் அருவம், உருவம், அருவுருவம் என மூவகைத் திருமேனிகளும் கூறப்படுகின்றன. பதி, உயிர்கள் தோறும் ஒன்றாய், உடனாய், வேறாய், உள்ளார். எல்லா உயிர்களிலும் அவர் உறைந்துள்ளார். ஆதலால் நாம் எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டுதல் வேண்டும்.

## பசு

பசு என்பதற்கு உயிர், ஆன்மா, சீவன் முதலான வேறு பெயர்களும் உண்டு. பசு என்னும் சொல்லுக்கு பாசத்தாற் கட்டுண்டது என்பது பொருளாகும். உயிர்கள் எண்ணற்றவை, பதியைப் போலவே அநாதியானவை, என்றும் உள்ளவை, உயிர்கள் அறிவுணர்வுகளை உடையனவாயினும் தாமாக அறியும் தன்மை இல்லாதன. உயிர்கள் தாம் செய்யும் செயல்களின் பலனை அனுபவிக்கின்றன.

நற்செயல்களைச் செய்யும் உயிர்கள் இன்பத்தையும், தீய செயல்களைச் செய்யும் உயிர்கள் துன்பத்தையும் அனுபவிக்கின்றன. உயிர்களின் இறுதி இலட்சியம் இறைவனை அடைதலாகிய முத்தியைப் பெறுதல் ஆகும். உயிர்களாகிய நாம் கடவுளுக்கும், சிவனடியார்களுக்கும் பெற்றோர்களுக்கும் தொண்டு செய்தல் வேண்டும். அவை பிறப்பு, இறப்பை இல்லாமற் செய்து பேரின்பமாகிய முத்திக்கு வழிகாட்டும்.

## பாசம்

உயிர்களைப் பற்றி நிற்கும் பொருள் பாசமாகும். பாசம் என்பது பந்தித்து நிற்பது எனப் பொருள்படும். பாசம் உயிரை மாசுபடுத்துவது என்பதால் அதற்கு 'மலம்' என்ற பெயரும் பொதுவாக வழங்கப்படுகின்றது. ஆணவம், கன்மம், மாயை என பாசம் மூவகைப்படும். இவற்றை மும்மலங்கள் என்றும் கூறலாம். இவை மூன்றும் அறிவில்லாத சடப்பொருள்களாகும். இவை உயிர்களின் அறிவை மயக்கி, துன்பத்தை இன்பமாகக் காட்டி, அவற்றை அனுபவிக்கச்செய்து, பிறவிகளை வழங்குகின்றது. உயிர்கள் கடவுளை அறியாதப்படி பாசம் தடை செய்கின்றது. எனவே நாம் பாசத்திலிருந்து விடுபட்டு, இறைவனை அறிய நல்வினை செய்வதுடன் கடவுளைப் பக்தியுடன் நாள்தோறும் வழிபடுவோமாக.

## பயிற்சிகள்

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. முப்பொருள்களும் யாவை?
2. அவற்றை வேறு எப்பெயர்களால் அழைக்கலாம்?
3. பதியின் மூவகைத் திருமேனிகளும் எவை?
4. பசு என்ற சொல்லின் பொருள் யாது?
5. மும்மலங்களும் யாவை?

## செயற்பாடு

1. பதியின் எண்வகைக் குணங்களை எழுதி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.
2. அவை தொடர்பாக ஆசிரியருடன் கலந்துரையாடுக.

## பாடச்சுருக்கம்

- ❑ சைவசித்தாந்தம் என்னும் சொல்லுக்கு முடிந்த முடிவு என்பது பொருளாகும்.
- ❑ பதி, பசு, பாசம் என்பன முப்பொருள்களாகும்.
- ❑ அருவம், உருவம், அருவுருவம் எனும் முத்திருமேனிகளும் தடத்தநிலையில் பதிக்கு கூறப்படுகின்றது.
- ❑ பசு என்பது ஆன்மாவாகும்.
- ❑ பசு என்ற சொல்லுக்கு பாசத்தாற் கட்டுண்டது என்பது பொருளாகும்.
- ❑ பாசம் என்ற சொல்லுக்கு உயிர்களைப் பந்தித்து நிற்பது எனப் பொருள்படும்.
- ❑ ஆணவம், கன்மம், மாயை என பாசம் மூவகைப்படும்.

# 14 நாட்டார் வழிபாடு



நாட்டுப்புற மக்களால் மிக நீண்ட காலமாக வணங்கப்பட்டு வரும் கிராமக் கடவுள்கள் ''சிறுதெய்வங்கள்'' என்றும் அழைக்கப் பெறுகின்றார்கள். இவர்களுக்கு நாட்டார் தெய்வம், குல தெய்வம், சிறுதெய்வம், ஊர்த்தெய்வம், காவல் தெய்வம், கிராமியத் தெய்வம் என்ற மறுபெயர்களும் உள்ளன. இந்த தெய்வங்களின் வழிபாடானது நாட்டார் மக்களின் நம்பிக்கை அடிப்படையிலும், அவர்கள் முன் னோர்கள் கற்றுத்தந்த முறைப்படியும் நடக்கிறது. உலகின் தொன்மையான வழிபாடு இயற்கை வழிபாடாகும். அதற்கு அடுத்ததாக சிறுதெய்வ வழிபாடு இருக்கிறது. சிறுதெய்வ வழிபாடு திட்டவட்டமான வரையறை இல்லாதது.

இவை நாட்டுப்புற மக்களின் காவல் தெய்வங்களாக நோய் நீக்கி வாழ்க் கைக்கு நலம் தருபவையாகக் கருதி வணங்கப்படுகின்றன. இத்தெய்வங்கள் பரந்து பட்ட தொடர்பில்லாமல் கிராமங்களையே இருப்பிடமாகக் கொண்டு, நாட்டுப்புற மக்களின் மரபோடு நீங்காத உறவு கொண்டு விளங்குகின்றன. வணங்கினால் நன்மையும் வணங்காவிட்டால் தீமையும் பயப்பன என்ற ஆழ்ந்த நம்பிக்கை காரணமாகப் பாமர மக்களால் இவை வழிபடப்பட்டு வருகின்றன.

சிறுதெய்வக் கோயில்கள் பெரும்பாலும் மரத்தடியிலும் வயல், குளம், ஏரி, ஆறு போன்ற நீர் நிலைகளுக்கு அருகிலுமே அமைந்திருக்கும். இக்கோயில்கள் கிழக்கும் வடக்கும் பார்த்து இருத்தல் வேண்டும் என்பது மரபு. நீங்கள் வழிபடச் செல்லும் கோயிலிலும் கூட இதனைப் பார்க்க முடியும்.



சிறு தெய்வங்களுக்கு கோயில் எழுப்பி வழிபடும் வழக்கம் பிற்காலத்தில் தோன்றிய ஒன்றாகும். பெரும்பாலும் திறந்த வெளியில் மரத்தின் கீழேயே தெய்வமாகக் கருதி வழிபடத்தக்க கல், சூலாயுதம், வேல், அரிவாள், விளக்கு மாடம் போன்றவை இருக்கும். வேறு சில இடங்களில் பீடம் அமைக்கப்பட்டு மேற்கூறிய வழிபாட்டுப் பொருள்கள் வைக்கப்பட்டிருக்கும். இதற்கு அடுத்த நிலையில் சிலைகள் (தெய்வச் சிலைகள், குதிரை, நாய்) உருவாக்கப்பட்டு அவை திறந்த வெளியிலோ கோயிலினுள்ளோ வைக்கப்பட்டிருக்கும். இக்கோயில் கூரைகள் வேயப்பட்டதாக சதுர வடிவிலோ, வட்ட வடிவிலோ அமைந்திருக்கும்.

நாட்டார் தெய்வ வழிபாட்டில் சிற்பக்கலை, விக்கிரகக்கலை முதலான வற்றுக்கு இடமில்லை. விசேட இசைக்கருவிகள் இசைக் கப்படுவதில்லை. நாட்டார்

தெய்வ வழிபாட்டுச் சடங்குகள் பிரதேசத்துக்குப் பிரதேசம் வேறுபடும். இவ்வழிபாடு ஆகம முறை சாராத ஒன்றாகும். இருப்பினும் காலப்போக்கில் ஏற்பட்ட மாற்றங்களின் காரணமாக ஆகம வழிபாட்டில் செல்வாக்கும் இடம்பெறுகின்றது.இச் சடங்கை பூசாரிமார், கட்டாடிமார், கப்புகனார், திருநீற்று ஆண்டிகள் போன்றோர் மேற்கொள்வர்.

சிறுதெய்வ வழிபாடுகளில் தெய்வங்களை அலங்கரித்தல், பூசை செய்தல், படையல் போடுதல், நேர்த்திக் கடன் செலுத்துதல், ஆடியும் பாடியும் துதித்தல் போன்றவை வழிபாட்டு முறைகளாக அமைகின்றன.

இலங்கையில் இவ்வழிபாடு யாழ்ப்பாணம், வன்னி, மட்டக் களப்பு, திருகோணமலை, மலையகம் போன்ற பிரதேசங்களில் மக்களால் வழிபடப்படுகின்றன.

நாட்டார் வழிபாட்டில் ஆண் தெய்வங்களும் பெண் தெய்வங்களும் வழிபடப்படுகின்றனர். வைரவர், ஐயனார், வதனமார், அண்ணமார், பெரியதம்பிரான், மதுரைவீரன் முதலான ஆண் தெய்வங்களும் அம்மன், காளி, மாரி, பேச்சி முதலான பெண் தெய்வங்களும் வழிபடப்படுகின்றனர்.

## பயிற்சிகள்

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. சிறு தெய்வங்களுக்குரிய ஏனைய பெயர்கள் எவை?
2. கிராமியத் தெய்வங்கள் எவற்றின் பொருட்டு வழிபடப்படு கின்றனர்?
3. சிறுதெய்வங்களின் கோயில்கள் எவ்வாறான இடங்களில் அமைந்து காணப்படும்?
4. கிராமிய வழிபாட்டில் பூசை நிகழ்த்துபவர் எப் பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றார்?
5. கிராமிய வழிபாட்டில் இடம்பெறும் ஆண் கடவுளர் யாவர்?

## செயற்பாடு

1. உமது பிரதேசத்தில் வழிபடப்படும் கிராமியத் தெய்வங்களைப் பட்டியல் படுத்தி வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள்.

## பாடச்சுருக்கம்

- நாட்டுப்புற மக்களால் மிக நீண்ட காலமாக வழிபடப்படும் தெய்வம் கிராமியத் தெய்வம் என அழைக்கப்படும்.
- உலகின் தொன்மையான வழிபாடு இயற்கை வழிபாடாகும்.
- எளிமையான வழிபாட்டு முறையாகும்.
- இவ் வழிபாட்டு முறை பிரதேசத்துக்கு பிரதேசம் வேறுபடும்.
- பிராமணர் அல்லாதோர் இப்பூசைகளை நிகழ்த்துவர்.

# 15 பறாளை ஈஸ்வர விநாயகர் ஆலயம்



## அ. ஆலய அமைவிடம்

இலங்கையின் வடபால் யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ்ப்பாண நகரிலிருந்து வடமேற்கு முகமாக சுமார் பதினைந்து கிலோமீற்றர் தூரத்தில் காரைநகர் வீதிக்கு அண்மையாக திருவடி நிலை சமுத்திரக் கரைக்குச் சமீபத்தில் தொல்புரம், சோழியபுரம் என்னும் இரு கிராமங்கள் உள்ளன. சோழியபுரம் பிற்காலத்தில் சுழிபுரம் என மருவியுள்ளதாகக் குறிப்பிடுவர். சுழிபுரம் கிராமத்தின் பறாளைப் பதியில் பறாளை ஈஸ்வர விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது.

'ஊற்றுதேன் பொழில்சூழ் தென் பறாளை...' எனப் பறாளை விநாயகர் பள்ளில் சின்னத்தம்பிப் புலவர் குறிப்பிடுவது போன்று இவ்வாலயத்தை நெல் வயல் நிலங்களும்,தோட்ட வயல்களும், மருது, அரசு முதலிய மரங்களும் சூழ்ந்து பசுமையளிக்கின்றன. இலங்கையில் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமைந்துள்ள புராதன விநாயகர் ஆலயங்களுள் இதுவும் ஒன்றாகும். இதன் தலவிருட்சம் மருதமரமாகும்.

## ஆ.ஆலய வரலாறு

யாழ்ப்பாண இராச்சிய காலத்துக்கு முற்பட்ட ஆலயங்களுள் ஒன்றாகக் கருதப்படும் இவ்வாலயம் சோழமன்னர்களின் பிரதிநிதியாகிய திசைமழுவன் என்னும் சிற்றரசனது காலத்தில் பரிபாலனம் செய்யப் பெற்றதாக மரபுவழி செய்திகள் மூலம் அறிய முடிகின்றது. மேலும் இவ்வாலயத்தில் இந்தியாவிலிருந்து வந்த வேதாரணியம் சைவக் குருமார்களினால் விழாக்கள் நடாத்தப்பட்டதாகவும், சோழ தேசத்திலிருந்து வந்த எழுவர் தங்கள் பரிவாரங்களுடன் பறாளை விநாயகரைத் தரிசித்துச் சென்றதாகவும் சொல்லப்படுகின்றது. இவ் வாலயம் யாழ்ப்பாண ஆரியச்சக்கரவர்த் திகள் காலத்தில் உன்னத நிலையில் பேணப்பட்ட விநாயகர் ஆலயங்களில் ஒன்றாகக் காணப்பட்டது.

இலங்கையில் போர்த்துக்கேயர் வருவதற்கு முன்னர் பொலிவுடன் விளங்கிய இவ்வாலயத்தை போர்த்துக்கேயர் இடித்தழிக்கத் தொடங்கினர். அவ்வேளையில் காகம் ஒன்று பறந்து வந்து இடிக்க ஆயத்தமாகிய போர்த்துக்கேய அதிகாரியின் கண்ணைக் கொத்தி ஆலயத்தை இடிக்கவிடாமல் தடைசெய்தது. அதனால் அங்குள்ள பிள்ளையார் **கண்ணைக் கொத்திக் காக்கைப்பிள்ளையார்** என அழைக்கப்படுகின்றார். எனவே போர்த்துக்கேயரினால் அழிக்கப்படாது தப்பிய ஆலயங்களில் ஒன்றாக இதுவும் காணப்படுகின்றது. இந்த அற்புத வரலாற்றினை பறாளை விநாயகர் பள்ளினூடாக அறிய முடியும்.

காலத்துக்குக்காலம் புனருத்தாரணம் செய்யப்பட்ட இவ்வாலயம் பஞ்சமுகப் பிள்ளையார், இராஜராஜேஸ்வரி, வைரவர், சண்டேஸ்வரர், நவக்கிரக விநாயகர் ஆகிய மூர்த்திகளுக்குரிய பிரகார ஆலயங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. அத்தோடு கிழக்கு நோக்கிய இராஜ கோபுரத்துடனும் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது.

## இ. பூசைகளும் விழாக்களும்

இவ்வாலயத்தில் தினமும் மூன்று வேளைப் பூசைகள் இடம் பெறுகின்றன. இப்பூசைகளை இந்தியாவிலிருந்து வந்த வேதாரணியம் சைவக்குருமார்களின் பரம்பரையினராலேயே நித்திய, நைமித்திய வழிபாடுகள் சிறப்பாக நடாத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாலயத்தின் வருடாந்த மகோற்சவமானது ஆனி உத்தரத்தன்று தீர்த்தோற்ச வம் வரக்கூடியவாறு பன்னிரண்டு நாட்கள் இடம் பெறுகின்றன. இவ்வாலயத்தின் இரதோற்சவம் சிறப்பானது.

இவ்வாலயத்தின் தீர்த்தமாக திருவடிநிலை சமுத்திர தீர்த்தக்கரை காணப்படுகின்றது. இராமபிரானது திருவடிகள் பட்ட இடமாகையால் இத்தீர்த்தத் துக்கு இப்பெயர் வழங்கப்படலாயிற்று. ஆனி உத்தரத்தன்று இத்தீர்த்தக் கரையில் தீர்த்தோற்சவம் இடம் பெறும்.

ஆவணி சதுர்த்தியன்று அடியவர்கள் பாற்காவடி எடுத்துவந்து தமது பாலினை அபிசேகத்துக்கு வழங்குவர்.

பறாளை ஈஸ்வர விநாயகர் மீது இவ்வாலயச் சூழலில் வாழும் மக்கள் பெரும் நம்பிக்கை கொண்டு வழிபாடு செய்து வருகின்றனர். தமது வயல்களில் பெறும் அறுவடைகளை முதலில் விநாயருக்கே சமர்பிக்கின்றனர்.

### ஈ. நூல்கள்

மிகவும் பழமைவாய்ந்த இவ்வாலயத்தின் மீது பல பிரபந்தங்களும் பாடப்பட் டுள்ளன. அவற்றுள் ஒல்லாந்தர் காலத்தில் வாழ்ந்த நல்லூர் சின்னத்தம்பிப் புலவரால் பாடப்பட்ட பறாளை விநாயகர் பள்ளு முதன்மையான பிரபந்தமாகும். அந்நூல் இத்தலத்தில் வீற்றிருந்து அருள்புரியும் பறாளை விநாயகரைப் பாட்டுடைத் தலைவராக் கொண்டு பாடப்பட்டுள்ளதாகும். சிந்து, விருத்தம், கலிப்பா ஆகிய யாப்புக்களால் இந்நூல் பாடப்பட்டுள்ளது.

சுத்தர்பணிந் தேத்துந் சுழிபுரத்து வீற்றிருக்கும்
அத்த பரஞ்சோதி அண்ணலே - கைத்தலத்துச்
சூலந் திரித்துமுனந் தோன்றால காலமெனக்
காலன் வரும் போது கா.

என்றவாறு சின்னத்தம்பிப் புலவர் பறாளை விநாயகர்பள்ளில் இவ் விநாயகரை வேண்டியுள்ளதை அவதானிக்கலாம். மேலும் கூழங்கைத் தம்பிரான், சித்தாந்த சரபம் சொக்கலிங்க தேசிகர் ஆகியோர் இவ் விநாயகர் மீது இரு பிரபந்தங்களைப் பாடியுள்ளனர்.

## பயிற்சிகள்

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. பறாளை ஈஸ்வரவிநாயகர் ஆலய மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் என்பனவற்றைக் குறிப்பிடுக.

2. பறாளை ஈஸ்வர விநாயகர் ஆலயத்தை போர்த்துக்கேயர் காலத்துக்கு முன்னர் பரிபாலனம் செய்தவர்கள் யாவர்?

3. பறாளை ஈஸ்வர விநாயகரது அற்புதங்களில் ஒன்றைக் குறிப்பிடுக.

4. இவ்வாலயத்தின் தீர்த்தம் யாது?

5. பறாளை ஈஸ்வரவிநாயகர் ஆலயத்தின் மீது பாடப்பட்ட பள்ளு பிரபந்தத்தையும் அதன் ஆசிரியர் பெயரையும் குறிப்பிடுக.

## செயற்பாடு

1. பறாளை ஈஸ்வர விநாயகர் ஆலயம் பற்றி இணையத்தளங்களில் வந்துள்ள செய்திகளை தரவிறக்கம் செய்து காட்சிப்படுத்தவும்

## பாடச்சுருக்கம்

- பறாளை ஈஸ்வரவிநாயகர் ஆலயம் தலம்,மூர்த்தி தீர்த்தம் விருட்சம். என்பன முறையே அமையப் பெற்ற ஆலயமாகும்.
- இது தமிழரசர் காலம் தொட்டு பரிபாலனம் செய்யப் பட்டு வந்த ஆலயமாகும்.
- போர்த்துக்கேயர் காலத்தில் இறைவனின் அற்புதத்தால் அழிவில் நின்றும் காப்பாற்றப்பட்ட ஆலயமாகும்.
- பறாளை விநாயகர் பள்ளு இவ்வாலயத்தின் சிறப்புக்களைக் கூறும் நூலாகும்.

# 16 திருக்கோணேச்சரம்



ஈழத்தில் பாடல்பெற்ற திருத்தலங்களில் திருக்கோணேச்சரமும் ஒன்றாகும். இது இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ளது. திருகோணமலை நகரத்தில் சுவாமிமலை என்ற குன்றின் உச்சியிலே இத்தலம் அமைந்துள்ளது. இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளிற்கு முன்னரே இந்துக்களின் புனித தலங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது.

இத்தலத்தின் இறைவன் திருக்கோணேச்சரநாதர், இறைவி மாதுமையம்பாளுடன் வீற்றிருந்து அருள் புரிகின்றார். இத்தலத்தின் தீர்த்தம் பாவநாசம், தலவிருட்சம் கல்லாலமரமாக விளங்குகின்றது. கோணேசர் மலையானது மகாமேரு மலையின் சிகரங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

இத்தல வரலாற்றினை அறிந்து கொள்ள உதவும் நூல்களாக தட்சிணகைலாய புராணம், திருக்கோணேச்சரபுராணம், கோணேசர் கல்வெட்டு போன்றவற்றைக் குறிப்பிடலாம். இத்தலத்திற்கு திருப்பணிகள் செய்த மன்னனாக குளக்கோட்டன் கருதப்படுகிறார். இத்தலம் இராவணன் காலத்திற்கு முற்பட்ட சிவாலயம் என்பது ஐதீகமாகும்.

கி.பி 1624 ஆம் ஆண்டு கொன்ஸ்ரன்டைன் டிசா என்ற போர்த் துக்கீச தளபதியால் இவ்வாலயம் தரை மட்டமாக்கப்பட்டு பின்னர் முந்நூற்றைம்பது ஆண்டுகளுக்குப் பின் சைவமக்கள் மீண்டும் இவ் வாலயத்தை உருவாக்கினார்கள். இவ் ஆலயச்சூழலில் கி.பி 1950 ஆம் ஆண்டிலே பல விக்கிரகங்கள் கண்டெடுக்கப் பட்டன. சைவ அடியார்களின் முயற்சியால் புதிய கோயில் அமைக்கப்பட்டது. கி.பி 1963 ஆம் ஆண்டில் இவ்விக்கிரகங்கள் பிரதிட்டை செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகமும் இடம்பெற்றது.

தட்சிணகைலாயம் எனப்போற்றப்படும் இத்தலத்தின் மீது திருஞானசம்பந்தர், அருணகிரிநாதர் என்போர் பாடல்களைப் பாடியுள்ளனர். இவ்வூரின் மலைகள் திரிகோண வடிவில் அமைந்திருப்பதாலும் தெய்வீகச்சிறப்புற்று விளங்குவதாலும் திருகோணமலை என்று சிறப்பிக்கப்படுகின்றது.

முன்னொரு காலத்தில் இலங்கையை ஆண்ட சிவ பக்தனான இராவணனது இஷ்ட தெய்வமாக திருக்கோணேசர் விளங்கினார் என்றும் தினமும் ஆலயத்திற்கு வந்து பூசித்துச் சென்றான் என்றும் கர்ண பரம்பரைக் கதைகள் கூறுகின்றன. கோணமலையில் இராவணன் வாளால் வெட்டி மலையெடுத்த இடம் இராவணன் வெட்டு என்று அழைக்கப்படுகின்றது. ஆயிரம் தூண்கள் அணிசெய்யும் கோயில் என்று போர்த்துக் கேயன் ஒருவன் இவ்வாலயத்தைப் புகழ்ந்துள்ளான். இத்தலம் கோணபர்வதம், திரிகோணம், திரிகூடம், மச்சேஸ்வரம் முதலிய பெயர்களால் அழைக்கப்படுகிறது.

இக்கோயிலில் ஆறுகாலப்பூசைகள் தினமும் இடம் பெறுகின்றது. இக்கோயிலின் மகோற்சவம் பங்குனி உத்தரத்தில் கொடியேற்றத்துடன் தொடங்கி பதினெட்டு நாட்களுக்கு நடைபெறுகின்றது.

இங்கு தேர் வலமும் இடம்பெறும். இதன் தீர்த்தம் பாபநாசத் தீர்த்தமாகும். இந்த ஆலயத்தில் சிவராத்திரி தினம் மிகச் சிறப்பாக நடைபெறுவதோடு கோணேசர் நகர் வலம் வரும் காட்சியும் நகரத்தின் காட்சியும் கண்கொள்ளாக் காட்சியாகக் காணப்படுகின்றது.

திருக்கோணேஸ்வர திருப்பதிகம், கோணஸ்வரர் அகவல் முதலியன இக்கோயில் மீதெழுந்த இலக்கியங்கள் ஆகும். இவற்றை விட திருக்கோணேச்சர ஆலய

வரலாறு, திருகோணமாமலை, கோணகிரீசர் அட்டகம், திருகோணமலையந்தாதி முதலிய நூல்கள் வாயிலாகவும் இவ்வாலய வரலாற்றினை அறிந்துகொள்ளலாம்.

## பயிற்சிகள்

**கீழே தரப்பட்ட சொற்களை வைத்து கீறிட்ட இடங்களை நிரப்புக**

***திருக்கோணேச்சரநாதர், கிழக்கு, மாதுமையம்பாள், 1624, தட்சிணகைலாயபுராணம், குளக்கோட்டன், போர்த்துக்கீசரால்***

1. திருக்கோணேச்சரம் ______________ மாகாணத்தில் அமைந்துள்ளது.
2. இத்தல இறைவன் ______________ இறைவி ______________ ஆவார்.
3. இத்தலவரலாற்றை கூறும் பிரதான நூல் ______________ ஆகும்.
4. இத்தலத்திற்கு ______________ எனும் மன்னன் திருப்பணிகளை செய்துள்ளான்.
5. இவ்வாலயம் ______________ ஆண்டு ______________ அழிக்கப்பட்டது.

## செயற்பாடு

1. உமது ஊரிலுள்ள பிரசித்திபெற்ற ஆலயமொன்றின் சிறப்புக்களைத் தேடியறிந்து வகுப்பறையில் கலந்துரையாடுக.

## பாடச்சுருக்கம்

- இலங்கையின் கிழக்கே இவ்வாலயம் அமைவு பெற்றுள்ளது.
- குளக்கோட்ட மன்னன் இவ்வாலயத்திற்குத் திருப்பணிகள் செய்துள்ளான்.
- இத்தல இறைவன் - திருக்கோணேச்சரநாதர், இறைவி - மாதுமையம்பாள், தலவிருட்சம் - கல்லாலமரம்
- திருஞானசம்பந்தர், அருணகிரிநாதர் போன்றோர் இத்தலத்தின் மீது பாடல்களைப் பாடியுள்ளனர்.
- கி.பி 1624 இல் இவ்வாலயம் போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்டு 350 ஆண்டுக்கு பின்னர் சைவமக்களால் இவ்வாலயம் புனரமைக்கப்பட்டது.

# 17 மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்



யாழ்ப்பாண நகரத்தில் இருந்து காங்கேசன்துறை செல்லும் நெடுஞ்சாலையில் 15 கிலோ மீற்றர் தொலைவில் மாவிட்டபுரம் கந்த சுவாமி கோயில் அமைந்துள்ளது. கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டில் திசை உக்கிர சோழன் எனும் அரசன் சோழ நாட்டில் இருந்தான். அவரின் மகளான மாருதப் புரவீகவல்லி குதிரை முகமும் மானுட உடலும் கொண்டிருந்தாள்.

சாந்தலிங்கன் என்னும் முனிவரின் வழிகாட்டலின்படி கீரிமலைக்குச் சென்றாள். அங்கே தவம் புரிந்த நகுல முனியை வணங்கி அவர் ஆசியுடன் கீரிமலையில் தீர்த்தம் ஆடினாள். கோயிற் கடவைப் பிரதேசத்தில் எழுந்தருளியுள்ள கந்தசுவாமியாரை பலதடவை வணங்கி வந்தாள். நாளடைவில் குதிரை முகம் மனித முகமாக மாறியது.

இவ்வாலய மகோற்சவம், பூர்வபட்ச சஷ்டித்திதியோடு கூடிய ஆனி உத்தரநாளன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆடி அமாவாசை அன்று தீர்த்தமும் அதற்கு முதல் நாள் தேருமாக 25 நாட்கள் நடைபெறும். இங்கு ஐந்து தேர்கள் வலம் வருகின்றன.

இந்நாட்களில் திருநடனத்திருவிழா, வேட்டைத்திருவிழா, கார்த்திகைத் திருவிழா, ஆறுமுகசுவாமி நடனத்திருவிழா, சப்பரத் திருவிழா, தீர்த்தத் திருவிழா என்பன சிறப்பாக நடைபெறும். ஆண்டு தோறும் கந்தபுராணப் படிப்பு வைகாசி மாதம் ஆரம்பமாகும். சூரன்போரும் கந்த சஷ்டி பூசையும் இடம்பெறும். சுவடிச் சாலை ஒன்று இங்கு உண்டு. இங்கு நூற்றுக்கணக்கான சமயநூல்கள் உள்ளன.

## பதவிளக்கம்

| | | |
|---|---|---|
| **மா** | - | குதிரை |
| **விட்ட** | - | நீங்கிய |
| **புரம்** | - | இடம் |
| **குதிரை முகம் நீங்கிய இடம்** | - | மாவிட்டபுரம். |
| **தலவிருட்சம்** | - | மாமரம் |
| **தீர்த்தம்** | - | கண்டகிதீர்த்தம் / அந்தர்வாவி (கீரிமலைக்கடல்) |

## பயிற்சிகள்

**சுருக்கமான விடை எழுதுக.**

1 . மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் எங்கே அமைந்துள்ளது?

2. மாவிட்டபுரம் எனப் பெயர் வரக் காரணம் யாது?

3. இவ்வாலயத்தின் மூர்த்தி, தலம், தீர்த்தம் யாது?

4. மகோற்சவம் எப்போது நடைபெறும்?

5. இவ்வாலயத்தில் நடைபெறும் வேறு விழாக்கள் எவை?

**சரி (✓) பிழை (×) இடுக.**

1. மாவிட்டபுரம் கந்தசுவாமிகோயில் திருகோணமலையில் அமைந்துள்ளது.

2. குதிரை முகம் நீங்கியதால் மாவிட்டபுரம் எனும் பெயர் ஏற்பட்டது.

3. இவ்வாலயத்தின் விருட்சம் ஆலமரமாகும்.

4. 25 நாட்கள் இங்கே திருவிழாக்கள் நடைபெறும்.

5. சூரன்போர் விமரிசையாக இவ்வாலயத்தில் கொண்டாடப்படும்.

## பாடச்சுருக்கம்

- யாழ்ப்பாண நகரில் இருந்து காங்கேசன்துறை செல்லும் நெடுஞ்சாலையில் 15 கிலோமீற்றர் தூரத்தில் மாவிட்டபுரம் அமைந் துள்ளது.
- மாருதப்புரவீக வல்லியின் குதிரை முகத்தை குமரிமுகமாக மாற்றிய ஆலயம் இதுவாகும்.
- குதிரை முகம் நீங்கியதால் மாவிட்டபுரம் என்ற பெயர் ஏற்பட்டது.
- பூர்வ பட்ச சஷ்டித்திதியோடு ஆனி உத்தர நாளன்று மாகோற்சவம் ஆரம்பமாகி 25 நாட்கள் நடைபெறும்.
- இவ்வாலயத்தில் சூரன்போர், கந்தசஷ்டி பூசை என்பன விமரிசையாக கொண்டாடப்படும்.

# 18 திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலயம்



இலங்கையின் கிழக்குத் திசையில் அமைந்துள்ள இவ்வாலயம் திருகோணமலை நகரத்தின் இருதய ஸ்தானம் போல் அமைந்திருக்கின்றது. இவ் ஆலயத்திற்கெதிரே பரந்து விரிந்து கிடக்கும் இந்துசமுத்திரமும் இவ்வாலயத்தின் இயற்கை அழகை மெருகூட்டிக் கொண்டிருக்கின்றது.

ஈழநாட்டின் புண்ணிய தலமாகிய திருக்கோணேஸ்வரத்தை பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் நின்றபடியே தரிசிக்கலாம். அம்பாளின் அருட்கடாட்சம் கோணேஸ்வரத்தில் படிய கோணேஸ்வரப் பெருமானின் அருட்கடாட்சம் அம்பாளுடைய ஆலயத்தில் நிறைந்து கொண்டிருப்பது போன்ற உணர்வு இவ்வாலயத்தில் நிற்கும் போது ஏற்படுகின்றது.

சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்பு நடந்ததாகக் கூறப்படும் கர்ணபரம்பரைக் கதை ஒன்று ஸ்ரீபத்திரகாளி அம்பாளிடத்துப் பயபக்தியை ஸ்திரப்படுத்திக் கொண்டு இருக்கின்றது.

சிவபூமியாம் திருகோணமலையில் தெய்வ விக்கிரகமொன்று இருக்கின்றது என மதுரைப் பிராமணன் ஒருவருக்கு தெய்வீக வாக்கு கிடைத்ததன் பேரில் அவர் திருகோணமலைக்கு வருகை தந்து குறிப்பிட்ட இடத்தைத் தோண்டிய போது செப்புக் கிடாரமொன்றில் அழகுமயமான தெய்வீக அன்னையின் சிலையொன்று இருக்கக் கண்டு ஆச்சரியம் கொண்டார். அந்தப் பிராமணர் விக்கிரகம் இருந்த இடத்தில் பிரதிஷ்டை செய்தார். அதுவே இன்றைய ஆலயமாகும்.

ஒருநாள் ஒரு பெண் தலைவிரி கோலத்தோடு அம்பாளுடைய சந்நிதானத்திற்கு முன்பாக உதாசீனமாகச் சென்றாளாம். அதனால் அப்பெண்ணினுடைய தலை ஒரு பக்கம் திரும்பி விட்டதாம். அம்பாளுக்கு அபச்சாரம் செய்து விட்டதாக அப்பெண் கனவுகண்டு குற்றத்தையுணர்ந்து ஆலயத்திற்கு வந்து தனது தலைமயிரை கத்தரித்து நேர்த்திக் கடனாகக் கொடுத்த பின்பு தான் தலையினை சரியான நிலைக்கு திருப்பக் கூடியதாக இருந்ததாம்.

பங்குனி உத்தரத்தை தீர்த்தோற்சவ தினமாகக் கொண்டு பத்துநாட்கள் மகோற்சவம் நடைபெறுகின்றது. இங்கு மஞ்சம், கைலாசவாகனம், சப்பரம் என்பன சிறப்பான திருவிழாக்களாகும். ஒன்பதாம் நாள் இரதோற்சவம் நடைபெற்று வருகின்றது. பங்குனி உத்தர தினத்தன்று கோணேசப்பெருமான் எழுந்தருளியிருக்கும் சுவாமி மலையின் அடிவாரக் கடற்கரையில் காலையில் தீர்த்தமாடுவர்.

வைகாசிப் பௌர்ணமிக்கு முதல் வரும் திங்கட்கிழமை இவ்வாலயத்தில் பொங்கல்விழா நடைபெற்று வருகின்றது. இது ஆலயத்தைச் சுற்றியுள்ள வீதியில் நடைபெறும். அன்று மக்கள் வெள்ளம் கடல் வெள்ளத்தை மறைத்து நிற்கும் அற்புதக் காட்சியைக் காணலாம்.

இவ்வாலயத்தில் இருந்த கட்டுத்தேருக்குப் பதிலாக 1972 ஆம் ஆண்டு சித்திரத்தேர் மூன்றும் மஞ்சமும் செய்யப்பட்டு உற்சவத்திற்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

கிழக்கிலங்கையில் முதன் முதலாக உருவாக்கப்பட்ட சித்திரத்தேர் இதுவாகும். 1981 ஆம் ஆண்டு இந்தத் தேர்களைப் பாதுகாப்பதற்காக பெரும் பணச்செலவில் தேராலயம் ஒன்று அமைக்கப்பட்டு உள்ளது.

இவ்வாலயத்தின் வரலாற்றினைத் திட்ட வட்டமாக வரையறுத்துக் கூறமுடிய வில்லை. என்றாலும் இவ்வாலயத்தில் கிடைத்துள்ள கல்வெட்டுக்கள் பழைய சாசனங்கள், கர்ண பரம்பரைக் கதைகள் என்பவற்றின் ஊடாக முதலாம் இராஜேந்திர சோழனுடைய காலமாகிய 11 ஆம் நூற்றாண்டில் இவ்வாலயம் சிறப்புற்று இருந்திருக்க வேண்டும் என்று சரித்திரப் பேராசிரியர் செ.குணசிங்கம் குறிப்பிடுகின்றார்.

## பயிற்சிகள்

**சுருக்கமான விடை எழுதுக.**

1. பத்திரகாளி அம்மன் ஆலயம் எங்கு அமைந்துள்ளது?
2. பத்திரகாளி அம்மன் ஆலயம் மகோற்சவம் எத்தனை நாட்கள் இடம்பெறு கின்றது?
3. இவ்வாலயத்தில் நின்றபடியே எவ்வாலயத்தை தரிசிக்கலாம்?
4. இவ்வாலயத்திற்கு எத்தனையாம் ஆண்டு தேராலயம் அமைக்கப்பட்டுள்ளது?
5. இவ்வாலய தீர்த்தம் யாது?

## செயற்பாடு

1. அம்பாளுடைய பல்வேறு திருவுருவங்களை வகுப்பறையில் காட்சிப்படுத்தி அவ்திருவுருவங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுக.

## பாடச்சுருக்கம்

- திருகோணமலை மாவட்டத்தின் இருதய ஸ்தானம் போல் இவ்வாலயம் அமைந்துள்ளது.
- கிழக்கிழங்கையில் அமைந்துள்ள சக்தி ஆலயங்களில் பத்திரகாளி அம்பாள் ஆலயம் குறிப்பிடத்தக்கது.
- திருக்கோணேஸ்வரத்தை இவ்வாலயத்தில் நின்றபடியே தரிசிக்கலாம்.
- இவ்வாலயத் தீர்த்தம் சுவாமி மலையின் அடிவாரத்திலுள்ள கடற்கரையாகும்.
- இவ்வாலயத்தில் கிடைத்துள்ள கல்வெட்டுகள், பழைய சாசனங்கள், கர்ண பரம்பரைக் கதைகள் ஊடாக இவ்வாலய வரலாற்றினை அறிந்து கொள்ளலாம்.

# 19 சீதையம்மன் ஆலயம்



இலங்கைத் திருநாட்டின் மத்திய மாகாணத்தில் இயற்கை எழில் கொஞ்சும் நகரம் நுவரெலியா மாநகரமாகும். இந்நகரிலிருந்து ஐந்து கிலோமீற்றர் தூரத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது.இவ்வாலயத்தில் ஸ்ரீராமபிரான், சீதை, ஸ்ரீலட்சுமணன், ஸ்ரீ ஆஞ்சனேயர் ஆகிய திருவுருவங்கள் மூலமூர்த்திகளாகவுள்ளன. இவ்வாலயம் இராமாயண காலத்தில் இருந்து வணங்கப்பட்டு வந்ததாக இதிகாசபுராணங்கள் கூறுகின்றன.

சீதா தேவியை சிறை எடுத்து வந்த இலங்கை வேந்தன் இராவணன் சீதாஎலிய எனும் பகுதியிலேயே சிறை வைத்திருந்தான். இந்த இடம் அசோக மரங்களால் சூழப்பெற்ற அடர்ந்த காடாக இருந்தமையால் அசோகவனம் எனவும் அழைக்கப்படுகின்றது. சீதையம்மன் ஆலயத்தோடு ஒரு நீரோடை அமைகின்றது. சிறை வைக்கப் பட்டிருந்த சீதை இங்குதான் நீராடி வந்ததாகவும் இந் நீரோடையில் பாறைகளிடையே ஒரு குகை போன்ற சிறுவாயில் வழியாக இரண்டு வித்தியாசமான நிறப்பூக்களைப் போட்டு மறு முனையில் வெளிவரும் முதற்பூவை அடையாளமாகக் கொண்டு பக்தர்கள் தமது வேண்டுதல்களை நிறைவேறுமா? நிறைவேறாதா? என்பதனை தீர்மானிக்கும் சக்தியாக இத்தலத்தின் நீரோடை விளங்கியதாக கர்ணபரம்பரைக் கதைகள் மூலமாக அறியக்கூடியதாகவுள்ளது.

பல வருடங்களுக்கு முன்பு விவசாய தேவைகளுக்காக பாரிய கிணறு ஒன்று வெட்டினார்கள். அப்போது அற்புதமொன்று நிகழ்ந்தது. வெட்டப்பட்ட கிணற்றில் ஸ்ரீராமபிரான், சீதாதேவி, லக்சுமணன், ஆஞ்சனேயர் ஆகியோரின் திருவுருவங்கள் கறுப்பு நிறத்தில் தத்ரூபமாகக் காட்சியளித்தன. இதனைக் காண பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் நேரில் வந்து தரிசித்ததாக அறிய முடிகின்றது. இந்த அற்புதம் நடந்த இடத்தை விலைகொடுத்தாவது வாங்கி அழியாத வரலாற்றுச் சின்னமாக்க வேண்டும் என்பது இங்குள்ள இராம பக்தர்களின் தீவிரமான கோரிக்கையாகும்.

ஆரம்பகாலத்தில் இவ்வாலயத்தின் சிறப்பினைக் கர்ணபரம்பரைக் கதைக ளூடாக அறியமுடிகிறது. இவ்வாலயப் பொறுப்பினை ஆர்.பி. புட்டானி, கே. எஸ். அருளம்பலம், எஸ். மாணிக்கவாசகர் ஆகியோர் ஏற்று நடாத்தினார்கள். கி.பி 1918ம் ஆண்டு 32 பட்டிகள் (பேர்ச்சஸ்) காணி குத்தகைக்கு கொடுக்கப்பட்டது.

இவ்வாலய நிர்வாக சபையினதும் வர்த்தக பிரமுகர்களதும், இந்திய இலங்கை நாட்டு பக்தர்களினதும் அயராத முயற்சியின் பயனாக 1998 ஆம் ஆண்டு பாலஸ்தானம் செய்யப்பட்டது. 2000 ஆம் ஆண்டு மகாகும்பாபிசேகப் பெருவிழாவும் சிறப்பாக நடைபெற்றது.

புதிதாக அமைக்கப்பட்ட ஆலயத்தில் ஸ்ரீஆஞ்சநேயருக்கு தனிக் கோயில் அமைக்கப்பட்டது. மற்றும் கோபுரத்தில் தசாவதாரங்களை விளக்கும் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. தூண்கள் தோறும் இராம யணக் காட்சி சிற்பங்களாக செதுக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீராமபிரான், சீதாதேவி, இலக்குமணன், ஆஞ்சனேயர் ஆகிய தெய்வங்கள் அதே இடத்தில் நிர்மாணித்திருக்கும் புதிய ஆலயத்திலும் மூலமூர்த்திகளாக வைக்கப்பட்டு சாதிமத பேதமின்றி மக்களால் வழிபடப்பட்டு வருகின்றது. அத்தோடு ஆலயவரலாற்றில் **2013** ஆம் ஆண்டு பட்டிப் பொங்கல் தினத்தன்று பரீட்சார்த்தமாக இரதபவனி நடைபெற்று வருடம்தோறும் பட்டிப் பொங்கல் தினத்தில் அந்நிகழ்வு சிறப்பாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பயிற்சிகள்

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. *சீதையம்மன் ஆலயத்தின் அமைவிடம் யாது?*
2. *அசோக வனம் என அழைக்கப்படுவதற்கான காரணம் யாது?*
3. *ஆலயப்பகுதியில் கிணறு வெட்டிய போது நடைபெற்ற அற்புதம் யாது?*
4. *சீதையம்மன் ஆலயத்திலுள்ள மூலமூர்த்திகள் எவை? அவற்றி னைக் குறிப்பிடுக.*

**கீழே தரப்பட்ட சொற்களை வைத்து கீறிட்ட இடங்களை நிரப்புக**

***(1998 ஆம் ஆண்டு, கர்ண பரம்பரை, 2000 ஆம் ஆண்டு, இரதபவனி)***

1. *ஆலயத்தின் சிறப்பினை ______________ கதைகளினூடாக அறியலாம்.*
2. *__________ ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டு __________ ஆம் ஆண்டு மகாகும்பாபிஷேகமும் நடைபெற்றது.*
3. *2013 ஆம் ஆண்டிலிருந்து பட்டிப்பொங்கல் தினத்தன்று __________ நடைபெறுவது இவ்வாலயத்தின் சிறப்பம்சமாகும்.*

## செயற்பாடு

1. *ஆசிரியரின் உதவியுடன் இராமாயணக் கதை பற்றிக் கலந்துரையாடுக.*
2. *பாத்திரங்களோடு தொடர்புடைய பெயர்களையும், படங்களையும் குறித்து வகுப்பறையில் காட்சிப்படுத்துக.*

## பாடச்சுருக்கம்

- இலங்கையின் மத்திய மாகாணத்திலுள்ள நுவரெலியா மாநகரத்திலிருந்து ஐந்து கிலோமீற்றர் தூரத்தில் சீதையம்மன் ஆலயம் அமைந்துள்ளது.
- இராமாயண காலத்திலிருந்து வணங்கப்பட்டு வந்ததாக இதிகாச புராணங்கள் கூறுகின்றன.
- சீதையை சிறை வைத்த இடமாகவும், அசோக மரங்களால் சூழப்பட்ட காடாகவும் இவ்விடம் விளங்குகின்றது.
- பல வருடங்களுக்கு முன்பு கிணறு வெட்டும் போது கறுப்பு நிறத்திலான திருவுருவங்கள் காட்சியளித்தனர்.
- இவ்வாலயச் சிறப்பினை கர்ணப்பரம்பரைக் கதைகளினூடாக அறியக் கூடியதாகவுள்ளது.

# 20 இலங்கையில் உள்ள சமயங்கள்

இலங்கையில் உள்ள மக்களால் சைவம், பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் என்னும் சமயங்கள் பின்பற்றப்படுகின்றன. சமயங்கள் யாவும் மக்களை நல்வழிப்படுத்துவன. சமயங்கள் வேறுபட்டவையாக இருந்தாலும் அவற்றிடையே சில பொதுவான பண்புகளும் காணப்படுகின்றன.

சைவ சமயத்தவரின் முழுமுதற் கடவுள் சிவபெருமான். சைவ சமயத்தவர்கள் வேதம், ஆகமம் என்னும் இரண்டையும் முதன்மை நூல்களாகக் கொள்கின்றனர். அச்சமயத்தினர் கோயிலுக்குச் சென்று (சிவனை வழிபடுவர்) இறைவழிபாடு செய்வர்.

பௌத்த மதத்தைத் தோற்றுவித்தவர் கௌதம புத்தர். திரிபீடகம், தம்மபதம் என்பன பௌத்த சமயத்தின் முதன்மை நூல்களாகும். அந்தச் சமயத்தவர்களின் வழிபாட்டுத் தலம் பௌத்த விகாரைகளாகும்.

கிறிஸ்தவர்கள் பரமபிதாவை வழிபடுவர். அத்துடன் மீட்பரான இயேசு கிறிஸ்துவை வழிபடுகின்றனர். பைபிள் என்பது அவர்களது முதன்மை நுலாகும். கிருஸ்வர்களின் வழிபாட்டு இடம் தேவாலயம் என அழைக்கப்படுகின்றது.

இஸ்லாம் சமயத்தவரின் வழிபாட்டுக்கு உரியவர் அல்லாஹ் ஆவார். அவர்களது முதன்மை நூல் திருக்குர்ஆன் என அழைக்கப்படும். அச்சமயத்தவர்களின் வழிபாட்டுக்குரிய இடம் பள்ளி வாசல் எனப்படும்.

இலங்கையராகிய நாம், எமது சகோதர இனத்தவர்களது சமய, கலாசார அம்சங் களை அறிந்து, அவற்றுக்கு மதிப்பளி ப்பது நல்ல பண்பாகும்.



## பயிற்சிகள்

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. பௌத்த சமயத்தவரின் வழிபாட்டிடம் எவ்வாறு அழைக்கப்படும்?

2. கிறிஸ்தவர்களுடைய முதன்மையான நூல் எது?

3. இஸ்லாம் சமயத்தின் வழிபாட்டிற்குரியவர் யார்?

## செயற்பாடு

**பின்வரும் அட்டவணையை நிரப்பி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.**

| சமயங்கள் | வழிபடப்படுபவர்/ சமய முதல்வர் | முதன்மையான நூல் | வழிபடும் இடம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

## பாடச்சுருக்கம்

- இலங்கையிலுள்ள மக்கள் சைவம், பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் என்னும் சமயங்களைப் பின்பற்றுகின்றனர்.
- ஒவ்வொரு சமயத்திற்கு சமய முதல்வர் அல்லது வழிபாட்டுக்கு உரியவர், முதன்மை நூல், வழிபடும் இடங்கள் ஆகியன உள்ளன.
- இலங்கையராகிய நாம் சகோதர இனத்தவர்களது சமய, கலாசார விடயங்களுக்கு மதிப்பளிக்க முன்வர வேண்டும்.